வெளியீடு எண் 321.

# திருப்புகலூர்த் திருப்பதிகங்கள்

316



சம்பந்தர். அப்பர். சுந்தரர்.

தருமபுர ஆதீனம்.

109650

வெளியீடு எண் 321.

உ

குருபாதம்

# திருப்புகலூர்த் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது

எழுதியவர்:

R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள்
ஆதீன தேவாரப் பாடசாலை ஆசிரியர்

1954

ஞானசம்பந்தம் பிரஸ்,

தருமபுரம்.

உ

குருபாதம்

# முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 8—7—54 அன்று திருப்புகலூர் ஸ்ரீ அக்னீசுவரசுவாமி, திருப் புகலூர் வர்த்தமானீச்சரம் ஸ்ரீ வர்த்தமானீச் சுவரசுவாமி ஆலயங்களில் அபிஷேக ஆரா தனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ் வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப் பெறுகிறது.

இதனுள் தலப்பதிகங்கள் 9-ம், சிவனெனும் ஓசை, தசபுராணம், பாவநாசப் பதிகங்கள், தனித் திருநேரிசைகள், குறைந்த திருநேரிசை கள், ஆருயிர்த் திருவிருத்தம், தலக்கோவை, நின்ற, தனி, திருத் தாண்டகங்கள், ஆய பொதுப் பதிகங்கள் 14-ம், மிளிர்கின்றன. அன்பர்கள் யாவரும் பாராயணஞ்செய்து, சிவபெருமான் திருவருளால் எல்லா நலன் களும் பெற்று உய்வார்களாக.

# உள்ளுறை


| | | பக்க எண் |
|---|---|---|
| **திருப்புகலூர்** | (பதிக முதற்குறிப்பு) | |
| 1. | குறிகலந்த ... ... | 1 |
| 2. | வெங்கள்விம்மு ... ... | 5 |
| 3. | செய்யர் ... ... | 11 |
| 4. | பகைத்திட்டார் ... ... | 15 |
| 5. | தன்னைச்சரண் ... ... | 19 |
| 6. | துன்னக்கோவணம் ... ... | 21 |
| 7. | எண்ணுகேன் ... ... | 24 |
| 8. | தம்மையேபுகழ்ந்து ... ... | 30 |
| **வர்த்தமானீச்சரம்** | | |
| 9. | பட்டம்பானிறமதியம் ... ... | 36 |
| **பொது** | | |
| 10. | சிவனெனுமோசை ... ... | 41 |
| 11. | பருவரையொன்று ... ... | 47 |
| 12. | பற்றற்றூர்சேர் ... ... | 54 |
| 13. | தொண்டனேன் ... ... | 60 |
| 14. | மருளவா ... ... | 66 |
| 15. | கடும்பகல் ... ... | 70 |
| 16. | வென்றிலேன் ... ... | 73 |
| 17. | தம்மானம் ... ... | 78 |
| 18. | எட்டாந்திசை ... ... | 81 |
| 19. | பாவமும்பழி ... ... | 84 |
| 20. | தில்லைச்சிற்றம்பலமும் ... | 88 |
| 21. | இருநிலனாய் ... ... | 92 |
| 22. | அப்பனீ அம்மைநீ ... ... | 95 |
| 23. | ஆமயந்தீர்த்தடியேனை ... ... | 100 |

உ

குருபாதம்

# திருப்புகலூர், திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்

## *தலச்சிறப்பு

இத்தலங்கள் சோழவளநாட்டுக் காவிரித்தென்பால் 75, 76-வது திருத்தலங்கள். இஃது புன்னுகவனம், சரண்யபுரம் இரக்தாரண்யம், என்ற நாமங்களையும் உடையது. மகாவிட்டுணு, இருடிகள், முனிவர்கள், தொண்டர்கள், பூசித்து வழிபட்டு அருளுற்ற சிறப் பினது, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக் கரசு நாயனர், சுந்திரமூர்த்திநாயனர் ஆகிய மூவர் திருப் பதிகங்கள் பெற்ற சிறப்பினது, பரணதேவர் பட்டினத் துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், ஆகிய திருமுறை ஆசிரியர்களாலும் போற்றப்பெற்று மிளிர்வது, முருக நாயனர் அவதாரம் செய்து தொண் டாற்றி அருளுற்ற தலமும் இதுவே.

**புகலூர், சரண்யபுரம்:** வாதாபி, வில்வலன் ஆகிய இரு அசுரர்களின் துன்பத்திற்கு ஆற்ருத தேவர்கள், சரண்புகுந்து இங்கு தங்கியிருந்த காரணம்பற்றி இப் பெயர்களை எய்தியது.

---

* எழுதியவர்: திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள், ஆதீன தேவாரப்பாடசாலை ஆசிரியர், தருமபுரம்.

**இரக்தாரண்யம்:** ரக்தன் என்ற அசுரன் வதிந் திருந்து வழிபட்ட காரணம்பற்றி இப்பெயர் எய்தியது.

**புன்னகவனம்:** முன்னாள் புன்னைவனமாகயிருந் தமைபற்றி, இப்பெயர் எய்தியது.

**பூசித்து வழிபட்டோர்:** அக்கினிதேவன் தான் எதையும் உட்கொள்கின்றவன் என்று தன்பாற் பொருந் தியபழி, தீர்ந்திடவேண்டி இங்குற்று, அகழி சூழ ஆக்கி அவ்வகழிநீரின் நடுவிருந்து தவம் செய்து வழிபட்டு, அருள்பெற்று நிந்தை தீர்ந்திடப் பெற்றனன்.

**பாணசுரன்:** இவன் தன் தாயின் விருப்பத்திற் கிணங்கி, இங்குற்று இலிங்க வடிவு கொண்டிருக்கும் பெருமானை எடுத்துச்செல்ல அசைத்துப் பேர்த்தனன். நினைந்தபடி கையில் பேர்த்தெடுக்க வாராத இறை வனைக் கண்டு வருத்தம் மிக்குற்றனன். வேண்டினன், அவனுக்கு இரங்கி, இறைவன் வடபுறமாகச் சிறிது திருமுடி சாய்த்து அருள்புரிந்தனன் மகிழ்ந்தனன் அசுரன்.

காசிபர், சமதக்கினி, வியாசர், பரத்துவாசர், ததீசி முனிவர், பிருகுமுனிவர், புலஸ்த்தியர், ஜாபாலி, வாத ராயர், ஆய, இருடிகளும், முனிவர்களும் விஷ்ணு மூர்த்தியும் இங்கு இலிங்க உரு அமைத்துப் பூசித்து, அருளுற்றனர்.

**பிரவரர்:** இவர் இராஜரிஷி, வைணவ உருவங்களை அழிவுசெய்ததின் காரணமாக நரகம் அடைந்தனர், அவர் சந்ததியில் தோன்றிய வீரசேனன், என்பான் இங்குற்றனன், புன்னுகவனநாதனைப் பூசித்து வழிபட்டு அருள்பெற்றனன், அப்பிரவரர், நரகின், நீங்கி விண்ணுலகடைந்தனர்.

**தொண்டர்கள்: முருகநாயனுர்** இவர் இத்தலத்திற்றோன்றிய அந்தணாளர், இங்கு வர்த்தமானீச்சரத்துப் பிரான் மகிழ இண்டை முதலாய மாலைகள் கொண்டு வழிபட்டு அவரது கோலம் கண்டு மகிழ்ந்தனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், நீலநக்கர், முதலாய தொண்டர்களைப் போற்றி உடனுறைவும் உற்று உவந்தனர், திருஞானசம்பந்தமூர்த்திகளால் திருப்பதிகத்துவைத்துப் போற்றப்பெற்ற சிறப்பினர், திருஞானசம்பந்தரோடு முத்தியில் கரந்தனர்.

**திருஞானசம்பந்தர்:** இவர் திருச்செங்காட்டங்குடிப்பெருமானை வணங்கி இங்குற்றனர். இறைவழிபாட்டொடு, அவ் இறைமகிழும் அடியவர் வழிபாட்டினும் சிறந்த முருகநாயனுர் வரவேற்றிடச் சென்று புகலூர் மன்னும் புண்ணியரை நேசமீதூர்ந்திட நெக்கு நெக்கு, உருகிடும் சிந்தையராய்த்தொழுது பணிந்தனர். பின் அம்முருகனுரது திருமடத்தில், அவரது நண்பினுக்கு இசைந்தாராய் எழுந்தருளியிருந்தனர். வர்த்தமானீச்சரத்துப் பெருமானை வணங்கி முருகநாயனுரது பணியின் திறத்தினைப் திருப்பதிகத்து அமைத்துப்

போற்றினர். ஆதிரை விழாநலங் கேட்டு ஆரூர்சென்று மீண்டனர். அங்கு வந்துற்ற திருநாவுக்கரசர், சிறுத் தொண்டர், திருநீலநக்கர் ஆய தொண்டர்களோடு அளவளாவிப் பெருமானை வழிபட்டுக் குறிகலந்த இசையெனும் திருப்பதிகம்பாடி அருளுற்றனர். இவர் பாடிய திருப்பதிகங்கள் தற்போது புகலூருக்கு இரண்டும் வர்த்தமானீச்சரத்திற்கு ஒன்றும் உள்ளன.

**திருநாவுக்கரசர் :** இவர் ஆரூரில் ஆதிரை விழாக் கண்டு மகிழ்ந்து, இங்கு வந்துற்று, முற்குறித்த தொண்டர்களோடு அளவளாவிப், பதிகங்கள் பல பாடிப் பணிந்து போற்றி, பெருமானை வழிபட்டு, கைத் தொண்டுபுரிந்து முருகரோடு, அடியார்களது நட்பு மீதூர, தொண்டின் நிலை உணர்ந்து, திகழ்ந்தனர், அடியார் உடன் உறைவும் பயனும்பெற்றனர், திருப்பதிகச் செழுந்தமிழின் திறம்போற்றி மகிழ்வுற்றனர், அந்நாள் பல பதிகளிலும் சென்று தொண்டின் நெறியாற்றி முதல்வன்தாள் தொழுதற்கு எண்ணினர், நீலநக்கர், சிறுத்தொண்டர் முருகர், ஆய அடியார்கள் பிரியா விடையருள அம்பர், கடவூர், வீழிமிழலை, மறைக்காடு முதலிய தலங்களை தரிசித்துப் பூந்துருத்தியிற் பணிபல புரிந்து, மீண்டும் இங்கு வந்துற்றனர், கைத்தொண்டோடு பணிபல புரிந்தனர், கசிவுற்ற மனமுடையவராய் கண்களில் நீர்மல்கி ஒழுகிட சிவன்தாள்களைப் பிரியாத சிந்தையராய், அச்சிந்தையிற்றங்கிய உணர்வு சிறந்து ஒளிமல்கிட எண்ணிலாத தமிழ்மாலைகள் மொழிந்தனர், அதனோடு இச்செய்யுள்கள் அருளுகின்ற முறையில்,

நின்றதிருத் தாண்டகமும் நீடுதனித் தாண்டகமும்
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்து திருத்தாண்டகமும்
கொன்றை மலர்ச்சடையார்பால் குறைந்த திருநேரிசையும்
துன்றுதனி நேரிசையும் முதலான தொடுத்தமைத்தார்.

ஆருயிரின் திருவிருத்தம் தசபுராணத்தடைவும்
பார்பரவும் பாவநாசப் பதிகம் பன்முறையும்
நேர்பட நின்றறைகூவுந்திருப் பதிகம் முதற்பிறவும்
பேரருளின் கடல் அளிக்கும் பெருமானைப் பாடினர்.

இப்பதிகங்களோடு, பிறவும் மொழிவாராகி உழவாரப் பணியும் புரிந்தனர் அவர்தம் நன்னிலைமை காட்டுவான், நம்பன் அருள் முன்னின்றருள, அங்கு தோன்றிய பொன்னேடு நவமணிக் குவியல்களை கற்களுடன் ஒப்ப, உழவாரப் படையினில் ஏந்தி வாவியிற்புக எறிந்தனர், பின் அவரது, வேறுபாடிலாத நிலைகண்ட, அரன் அருள்வழி, விண்ணின் இழிந்த அரம்பையர்கட்கு அரனருள் உணர்த்தி, செலச்செய்தனர். சித்த நிலை பிரியாது, செய்பணியின் தலைநின்ற இவர் முன்னுணர்வின் முயற்சியினால் திருவிருத்தம் பல மொழிந்தார், தன்னைச் சேவடிக்கீழ் இருத்திடப், புகலூர் இறைவனை வேண்டினார்.

உன்னடிக்கே போதுகின்றேன் புண்ணியா எனப் பதிகமோதிச் சிவானந்த ஞானவடிவமுற்று அடியிணைக்கீழ் அமர்ந்திருந்தார், இவர் இத்தலத்திற் பாடிப் போற்றிய திருப்பதிகங்கள் எண்ணிலாதன, அவற்றுள் தற்போது, தலப்பதிகம் ஐந்தும் இருந்து அருளிய, பொதுப் பதிகங்கள் பதினான்கும் உள்ளன.

ஸ்ரீ

**சுந்தரர்:** இவர் ஆரூர்ப் பங்குனி உத்திர விழாவிற்கு, பரவையம்மையாரது கொடைச்செயல் நிகழ்தற்பொருட்டு பொன்வேண்டும் குறிப்பினராய் இங்கு சார்ந்தனர். முன்பணிந்து வலங்கொண்டு புகலூர்த்தேவர்முன், நின்று இறைஞ்சினர். இசைப்பதிகம்பாடி நினைந்த கருத்தினை நிகழ்வித்தனர். பின், அந்நிலை வினை அவன்பால் விடுத்து, புறம்போந்து அன்பருடன் ஆலயத்திருமுன், அருகோரிடத்தில் அமர்ந்தனர். அருளால் நித்திரை வந்தெய்திடப், பணிக்கென ஆங்கு இருந்த செங்கற்களைக் கொணர்வித்து, தலையணையாக்கி, உத்தரியத்துயிலினை விரித்து நித்திரை எய்தினர் இறைவன் அருளால் அக்கற்கள் பொன்கற்களாயின, துயில் நீங்கி விழித்தெழுந்தனர். செங்கற்கள் பொன்கற்களாக இருந்தமையைக் கண்ணுரக்கண்டனர். திருஅருளை வியந்து, அவர் தம்மையே புகழ்ந்து பதிகம்பாடிப் பணிந்தனர். ஆரூர் சென்று பரவையாருடன் மகிழ்வுற்றனர். தற்போது இவர் திருப்பதிகம், இது ஒன்றே உள்ளது.

**நெற்குன்றவாணர்:** இவர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர்க் கோட்டத்து நெற்குன்றம் என்னும் ஊரில் தோன்றிய பெருநிலக்கிழார், சிவபக்தியோடு தமிழ்ப்புலமை வாய்ந்தவர். பஞ்சத்தால் வரி செலுத்தாமை பற்றி, அரசர் ஆணைவழி சிறைப்படுத்த அவரைத்தேடிவந்த ஏவலர்களை இங்கு கண்டனர். அரசன் ஆணையை அறிந்தனர். புகலூர் நாதனைத் தரிசித்து வருவதாக அநுமதிபெற்றுச் சென்றனர். பொய்கையில் நீராடி ஞானவிநாயகர் திருமுன் நின்று இச்செய்யுளைப் பாடினர்.

உரைசெய் மறைக்கும் தலைதெரியா ஒருகொம்பையென்றே
பரசும் அவற்குப் பெருநிழலாக்கும் பழனம் எல்லாம்
திரைசெய் கடற்றுறைச் சங்கம் உலாவுந் திருப்புகலூர்
அரசினிடத்து மகிழ்வஞ்சி யீன்றவோர் அத்திநின்றே.

அவ்வமையம் அவ்வழியே வந்துகொண்டிருந்த பக்தியும் செல்வமும் ஒருங்கே நிறையப்பெற்ற தேவரடியாள் ஒருவளின் காதில் இச்செய்யுள் சென்றுற்றது, பாடல் கேட்ட அவள் சிவபெருமானையும் பாடுவதோடு இச் செய்யுளை ஒரு அந்தாதி நூலுக்கும் 'காப்பாக்கலாமே' என்று கூறினர். அதுகேட்ட வாணர் ஆம் செய்யலாம், அச்செயல்; அரசிறைக்குப் பொருள் ஆகுமோ என்றனர். அம்மையார் திகைத்து ஏவலாளர்மூலம் செயலறிந்து அரசிறையைத் தந்து அவரை மீட்டனர். நெற்குன்ற வாணர் மகிழ்வுற்றனர். புகலூர் அந்தாதிநூலை இயற்றிப் போற்றினர். அவ்வம்மையாரும் மகிழ்வுற்றனர். இது, கர்ணபரம்பரை வரலாறு இவரைப்பற்றிய குறிப்பு இங்கு கல்வெட்டுகளிலும் காணப்பெறுகின்றன.

**தலத்தைப்பற்றி: தலத் திருப்பதிகங்கள் அருள் வன.** அடியார் குடிமைத்தொழில் மல்கிய புகலூர் வளர் செம்மையினால் உயர்வெய்து புகலூர் இது பொய் யிலா மனத்தவர்கள் பொருந்துகின்ற புகலூர் ஓசைமல்கு புகலூர் முருகன்செய் கோலம்கண்டு கண்குளிர ஒளி பரந்து மல்கிய புகலூர் நெஞ்சிருள் நீங்கிடவேண்டி அடியவர்கள் தென்சொல் வடசொல் மொழிகளினை இசைநரம்புக் கருவியொடும் இசைத்துப் போற்றித் தொழுகின்ற புகலூர். பூமியெல்லாம் புகழ்ந்திடும்

செல்வம் மல்கு புகலூர். வண்டு பண்பாடுகின்றசோலை சூழ் புகலூர். தாமரைகளோடு மீனினங்கள் பொருந்திய விளைவுசெறி வயல் வளம் மல்கு புகலூர். மலர்ச்செறி விடைத், தேனுண்டவண்டுகள் இசையினைச் செய்திட அன்னங்களொடு மயில்கள் ஆடிடுகின்ற பொழில்சூழ் புகலூர் எருமைகள் பாய்கின்ற பொய்கைசூழ் புகலூர். பறவை இனங்களின் பாட்டருப்புகலூர், புன்னை மலர்த் தலையில் வண்டுறங்குபூம் புகலூர் என்றும்.

**பெருமானைப்பற்றி:** என்றும் கழலேத்துகின்ற பெரியவர்களின் உள்ளத்தின்நிலாவி சிந்தையுள்நீங்கா இறைவன். அடியார் மேல்வினைபாற்றுவோன். பணி வாரை மெய்யநின்றேன் அடியார்கட்கு அருள் தந்து மகிழ்வோன். அடியார்கள் ஆகம்வைத்த பெருமான் முருகன் முப்போதும் பூசித்த மலர்களை முடிமேலுடைய வர்த்தமானீச்சரத்தார் அப்பெருமானடிபரவ இடர் கழியும் அமருலகம் உறும். ஏத்துவார்க்கு எளியர். மெய்யர்க்கு மெய்யர். திருந்தாரிடத்து என்றும் பொருந் தார். சேமநெறியர் சீரையுடையர். அப் புகலூரண்ணல் செய்வன சிவலோகத்து இருத்திடல், கோணப்பிரானைக் குறுகிடவினைகள்குறுகா, புண்ணியன். அவனை ஐந் தெழுத்தோதிக்காணுமிடம் புகலூருமென்னெஞ்சமும், புகலூரன் தன்னை ஓதித்தொழுது மதிப்பவர்தம் அகத் தாமரையினை இடமாக் கொண்டோன் களைகண்நீயே உன்னடிக்கே போதுகின்றேன் புகலூர் எந்தையைப் பாடுமின். இம்மைப்பயன் சோறுடு கூறைபெறல். இடர் கெடல் ஆம். அம்மையில் சிவனுலகம் பெறல் ஆம். இஃது நிச்சயம் அடியர் அவன்புகழல்லால் வேறு எதனை

யும் கேளார். எனவும், திருப்பதிகங்கள் போற்று கின்றன.

**கல்வெட்டுக்கள் அறிவிப்பன:** கல்வெட்டு இலாகா A. R. No. S 42 to 108. of 1928. என்ற பதிவுப்படி கல்வெட்டுகள் 67. அவற்றுள் திருமுறை கண்ட சோழனான முதல் ராஜராஜன் (கி. பி. 985 - 1012 காலத்தவை 14) (கி. பி. 1012 - 1045) அவன் மகன் காலத்தவை 3, முதற்குலோத்துங்கசோழன். (கி.பி.1072-1117) காலத்தவை 12, மூன்றும் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178 - 1218) காலத்தவை 10, இவைகளோடு பிறவும் உள்ளன. இக்கல்வெட்டுக்களால் இம்மையே தருவான், பொய்யாதசேவடி, ஒளிவளர்விளக்கு, கோணல்மாதேவன், கோணல்வடுகன் பெரியஉடையார், என்ற பெயர்கொண்டு, இறைவரையும், குளிச்செழுந்த நாயனார் என்று திருநாவுக்கரசரையும், நம்பி முருகன் என்று முருகநாயனாரையும், பனையூர்நாட்டுப் பிரமதேபம் என்று தலத்தையும், தருமபுரத்து நாயனார், யாழ்மூரி நாயனார் என்று திருநீலகண்ட யாழ்ப்பாணரையும், நக்கநாயனார் என்று திருநீலநக்கநாயனாரையும், ஸ்ரீ இறையூர் உடையான், அரையன் கங்கைகொண்டானான சோழவிச்சாதரப் பல்லவரையன், ஆற்காட்டுக்கிழான், சேதுராயன், மகாதேவ பண்டாரத்தின் சிஷ்யனான அருணாசலத் தம்பிரான் என்று பணியாளர்களையும், பணிசெய்துபோற்றிய, அரசர் முதலோரையும், முதற் பிராகாரத்துத் தெற்குத் திருவாயிலுக்கு இராஜராஜன் திருவாயில் எனப் பெயர் வழங்கியமைபற்றியும், அப்பர்

அடிகட்கு சித்திரையிலும், வைகாசியிலும் முதல் ராஜ ராஜன் அமைத்த விழாபற்றியும், இக்கோயில் திருப் பதிகம் விண்ணப்பம் செய்வாரிலே, தேவாரத்துப் பெரிய உடையார்க்குத் திருப்பதிகம் விண்ணப்பம் செய் வாரில் ஒருவருக்கும் அவர் வர்க்கத்தாருக்கும் காணி யாகக் கொடுத்த விபரத்தையும், குளம் வெட்டவும், செங்கழுநீரோடை அமைப்பதற்கும், நந்தனவனம் அமைப்பதற்கும், திருப்பள்ளித்தாமம் (பூமாலை) தொடுப்பதற்கும், யக்ஞோபவிதம் தருவதற்கும், அமா வாசை தீர்த்தவிழா நடத்துதற்கும் நிபந்தங்கள் ஏற்படுத்தியதுபற்றியும், திருநாவுக்கரைய தேவருக்கு சதயவிழா நாட்களில் அஷ்டமங்கலம் பிடிக்கும் விபர மும் அத்தேவர்க்கு நிவேதனமாகிய பிரசாதங்களை சிவ யோகிகளும், ஞானிகளுமே பெறவேண்டுமென்று பெறு பவர்களுக்கு குளக்கரையில் மடமொன்று அமைந்திருந் தமைபற்றியும் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. (இஃது 1942 திருப்புகலூர்த் தேவஸ்தான வெளியீட்டுக் குறிப்புச் சுருக்கம்).

**ஆலயம் :** நாற்புறங்களிலும் அகழி (அக்னி தேவர் அமைத்தது) சூழ, நடுவே திகழ்கின்றது. நான்கு வீதிகள், நான்கு மடவிளாகங்கள், இரண்டுபிரகாரங்கள், அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்தமண்டபம், தீர்த்தமண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆய மண்ட பங்களோடு திருமதில்கள் எட்டுடையதாய், அழகிய இராஜகோபுரத் திருவாயிலோடு, வர்த்தமானீச்சுரர், கருந்தார் குழலியம்மை, ஆலயங்களையும் உள்ளுடைய

தாகி அழகொடும் திகழ்கின்றது. தவிர, தெற்கில் ஞானவிநாயகர் ஆலயமும், கிழக்கில் தேரடி விநாயகர் ஆலயமும் சூழ்ந்து உள்ளன. தென்மேற்கு, வட மேற்கு, தென்கிழக்கு முதலிய இடங்களில் இருந்த காளி, மாரி, ஐயனார் ஆலயங்கள் சிதைவுற்றுக் காணப் பெறுகின்றன.

**மூர்த்திகள் :** இறைவன் அக்கினீசுரர்; பாணு சுரனது பெயர்ப்பினால் சிறிது வடக்கில், சாய்ந்த முடி யுடையர் அழகிய இலிங்கத் திருவுருவினர். கிழக்கு நோக்கித் திகழ்கின்றனர், அப்பர் அடிகள் போற்றும் கோணற்பிரானாரும் இவரே, இவருக்கு வடக்கில் இறைவர் - வர்த்தமானீச்சரர், கிழக்கு நோக்கியும், இறைவி - மனோன்மணி அம்மையார். தெற்குநோக் கியும் திகழ்கின்றனர். (முருகனார் பணிசெய்து போற்றிய உமைமணாளர் இவரே) இறைவி - கருந்தார்குழலி தெற்குநோக்கித் திகழ்கின்றனர், (இவரது ஆலயம் இரண்டாம் பிராகாரத்துள் துவஜஸ்தம்பத்தின் வடக் கில், தெற்குநோக்கித் திகழ்கின்றது, முதற்பிரகாரத்துள் தெற்கில் அகோரலிங்கம், பூதேஸ்சுவரர், தக்ஷிணா மூர்த்தி, தென்மேற்கிலிருந்து வடமேற்குவரை வாதாபி கணபதி, அப்பர்சுவாமிகள், ததீசி, பராசரர், பிருகு, சுப்பிரமணியர், புலஸ்தியர், ஜாபாலி. வாதராயர், நீல கண்ட சிவாசாரியார், ஆகியோர் வழிபட்ட, இலிங்க மூர்த்திகள், சுப்பிரமணியர், மகாலெக்ஷ்மி, ஆய மூர்த்தி களும் வடக்கில் சனீசுரர், அன்னபூரணி, சரஸ்வதி, நவக்கிரகம், பவிஷ்யேசுரர், வாமதேவலிங்கம், சண்டே சரும், வடகிழக்கில் நடராஜர், தெற்கில் அறுபத்து மூவரும், இரண்டாம் பிராகாரத்துள், திருமுன் நந்தி தேவர் துவஜஸ்தம்பம் தென்கிழக்கில் சிந்தாமணீஸ்வரர், தென் மேற்கில் நர்த்தன கணபதி, விஷ்ணு இலிங்கம்,

வடகிழக்கில். சிங்கவுருவங்கொண்டு அப்பரடிகளை உட்கொள்ளும் ஐக்கியமூர்த்தி, பாரத்துவாச இலிங்கம் ஆய மூர்த்திகளும் உள்ளனர். சந்திரசேகரர், திரிபுர சம்ஹாரமூர்த்தி, சோமாஸ்கந்தர், அம்பிகை, சுப்பிரமணியர், சண்டேசர், விநாயகர், ஆடிப்பூர அம்பிகை, அப்பர் மூர்த்தி, ஆய விழாமூர்த்திகளும், உள்ளனர். அப்பமூர்த்தியின் உருவ அமைப்பு உணர்வுடையார்களது உள்ளத்துணர்வினைப் பெருக்கி உருகச் செய்திடுகின்ற, சிறப்புமிக்கு அமைந்த அருளுருவ மூர்த்திகள். (கண்டுடயனுறுக).

**தலவிருக்ஷம் :** புன்னைமரம். இது வடக்கு முதற் பிரகாரத்துள் உள்ளது.

**தீர்த்தங்கள்:** அக்னிதீர்த்தம். இஃது ஆலயத்தைச் சூழ்வதாகித் திகழ்கின்றது. (அகழி) முடிகொண்ட சோழப்பேராறு, (முடிகொண்டான் ஆறு) இது தென்பால் ஓடுகின்றது.

**பூசனை :** நாள்தோறும் பூசனை ஆறு காலங்களிலும் நன்கு நடைபெறுகின்றது.

**விழா :** ஆண்டுதோறும் வைகாசி பிரமோத்ஸவம் ஆடிப்பூரம், பதினெட்டாம்பெருக்கு, தைப்பூசம் ஆய விழாக்களோடு, சித்திரையில் அப்பரடிகள் வரலாற்று விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்தில் அக்கினிதீர்த்தத்தும், ஆடி, தைமாதங்களில் சோழ பேராற்றிலும் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

**இத்தலம் :** நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. பஸ் மார்க்கம்.

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருப்பதிகங்கள்

பண் — நட்டபாடை

இராகம் — நாட்டை] [தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

குறிகலந்தவிசை பாடலினனசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனெருதேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடம்மொய்ம்மல
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே. [ரின்

1. இசைகலந்த பாடலினன், விருப்பினாலே இவ்வுலகிடை (பக்குவர்களது) முறைமையினில் ஒன்றியருளுகின்ற ஒப்பற்ற தன்மையன், இடபம் உகந்தேறுவோன், பலியினை 'விரும்பிடுகின்ற, புலித்தோலாடை யணிந்த அரையினன், சிவன்; அவனது இடம், வண்டுகள் சூழ்ந்து மலர்செறிந்த பொழிலாற்சூழ்ந்த ஆங்கு மேகங்கள் தவழ்கின்ற புகலூர்.

காதிலங்குகுழை யன்னிழைசேர்திரு மார்பனொருபாகம்
மாதிலங்குதிரு மேனியினன்கரு மானின்னுரியாடை
மீதிலங்கவணிந் தானிமையோர்தொழ மேவும்மிடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை பாடும்புகலூரே. 2

2. குழைதிகழ்கின்ற காதினன், பூணூல்சேர்ந்த மார்பன், உமையொருபாகம் திகழ்மேனியன், கருமானுரி ஆடையணிந்த சிவன், தேவர்கள்தொழுதிட மேவிய இடம்; வண்டுகள் இசைபாடுகின்ற பொழில்வளம் செறிந்த புகலூரதுவே.

பண்ணிலாவும்மறை பாடலினானிறை சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடையான்பெரியார்கழலென்றுந்தொழுதேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுணீங்கா வொருவனிடமென்பர்
மண்ணிலாவும்மடி யார்குடிமைத்தொழின் மல்கும்புகலூரே. 3

3. பண்திகழ்கின்ற வேதப்பாடலன், உமையொரு பாகன், திருவடியிணைகளைத் தொழுதேத்துகின்ற பெரியவர் களது சிந்தையுள் நிலாவி நீங்காத ஒருவன், அவனது இடம்; அடியார்களது குடிமைத் தொழில்மல்கிய புகலூர் என்பர்.

நீரின்மல்குசடை யன்விடையன்னடை யார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு னிந்தானுலகுய்யக்
காரின்மல்குகட னஞ்சமதுண்ட கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினாலுயர் வெய்தும்புகலூரே. 4

4. உலகுய்யக் கடல் நஞ்சுண்ட கடவுள், கங்கை நீர்மல்கு சடையர், விடையர், மலைவில்லினாலே அசுரர் களது புரங்கள் மூன்றையும் முனிந்த சிவன், அவனது இடம்; செம்மையினாலே சிறப்புற்று உயர்வாந் தன்மை யொடுந்திகழ்கின்ற புகலூர் இதுவே என்பர்.

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்மடியார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத் தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ ருந்தும்புகலூரே. 5

5. வெள்ளிய நீறணிந்த சிவந்த மேனியர், அடியார் களைப் பொருந்துகின்ற வினைகளை நீக்கிடுவர், போற்றி சைத்துப் பணிவாரைப் பொருந்திநின்ற பெருமான், அப் பெருமானாரது உறைவிடம். அவனது அருளையே பேணிடு கின்ற பொய்மையிலா உள்ளத்தவர்கள் நீங்காதுறைந்திடு கின்ற புகலூர்.

கழலின்னோசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலின்னோசைகுறட் பாரிடம்போற்றக் குனித்தாரிடமென்பர்
விழவின்னோசையடியார்மிடைவுற்றுவிரும்பிப்பொலிந்தெங்கும்
முழவின்னோசைமுந் நீரயர்வெய்த முழங்கும்புகலூரே. 6

6. காலில் அணிகழற் சிலம்போசை கலித்திட, குழலூதிப் போற்றிடும், குறட் பூதங்கள் சூழக் கானிடை ஆடும்பெருமான், சிவன்? அப்பெருமானாரது இடம்; கடல் ஓசையும் அயர்வுற அடியவர்களால் விரும்பிப் போற்றப் பெறுகின்ற விழவோசை முழவோசைகளின் முழக்கம் திகழ்கின்ற திருப்புகலூர்.

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைத்தன்மேல் விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தவடி யார்தொழுதேத்த வுகக்கும்மருடந்தெம்
கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வள மல்கும்புகலூரே. 7

7. கங்கையணிந்த சடைமிசை மதியணிந்தபெருமான் உள்ளமாரத் தொழுதேத்தும் அடியார்கட்கு அருள்தந்து உகந்திடும் பெரியோன், வஞ்சகம்நீங்க பழிபாவம் தீர்த் தருளும் கடவுள், 'அத்தகைய கடவுளர் உறைவிடம் புகலூர் என்பர், அப்புகலூர் பறவை இனங்கள் மல்கிய விளைவாற்செறிந்த வயல்வளம் உடையது.

தென்னிலங்கையரை யன்வரைபற்றி யெடுத்தான்முடி திண்டோள்
தன்னிலங்குவிர லானெரிவித்திசை கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு மேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேன்மதி தோயும்புகலூரே. 8

8. மதியந்தவழ்கின்ற அழகிய மாடமாளிகைகள் மல்கிய புகலூர் அதனையே. மின்னொத்த சடையினன், கயிலையையெடுத்த இராவணனது முடிகளொடு தோள்களைத் தனது கால்விரலால் நெரித்தோன், பின் அவனது இசைகேட்டு அருளையும் புரிந்தோன், உமையாளொடும் மேவிய சிவன், அவனது இடமென்று கூறுவர்.

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு தேத்தும்மடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமனொடு மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தவெரி யாய்மிகவோங்கிய வெம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்னிழலான்மது வாரும்புகலூரே. 9

9. நாகமணிந்த சடாமுடியன், கைதொழுது ஏத்துகின்ற அடியவர்கள், உள்ளத்தே வைத்துப் போற்றுகின்ற பெருமான், மாலும் பிரமனும் தொழுதேத்திட அங்கு அவர்கள் காணாவண்ணம் தீப்பிழம்பாய் ஓங்கிநின்ற சிவன், அவனது இடம்; யாவரும் இன்புற அமைந்த பொழில் வளம் மல்கிய புகலூரதுவாகும்.

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர் செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும்புகலூரே. 10

*10.* பொருளாக் கொள்ளுதற்கில்லாத தேரர், சாக்கியர்களது சொற்களைத் தவிர்த்திடுவார். தவத்தவர் தங்களது கடவுள் சிவனுர் உறையுமிடம்; நீரோடு, கொய்த மலர் கொண்டுதூவி, துதிசெய்து, மெய்மைத் தவத்தின் முயல்கின்றவர்களாய பெரியோர்களை உயர் வானகத்துட் புகுதுவிக்கின்ற புகலூரதுவே.

புற்றில்வாழுமர வம்மரையார்த்தவன் மேவும்புகலூரைக்
கற்றுநல்லவவர் காழியுண்ஞானசம் பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றும்மிசை பாடியமாந்தர் பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிப்பொலிவாரே.

*11.* கற்ற நல்லவர்கள் பணிந்தேத்தும் காழிஞான சம்பந்தன் பாம்பரையார்த்த பரமன்மேவிய புகலூரைப் போற்றிப்பரவிய இத்தமிழ்மாலையினை இசையொடும் பொருந்தப் பற்றிப்பாடிடும், மனிதர் பரமனடிசேர்ந்து குற்றங் குறைகளின்றி என்றும் நீங்காது ஓங்கிய புகழொடும், பொலிவுற்றுத்திகழ்வர்.

திருச்சிற்றம்பலம்.

பண் – செவ்வழி

இராகம் – எதுகுலகாம்போதி] [தாளம் – திரிபுடை

திருச்சிற்றம்பலம்

வெங்கள்விம்மு குழலிளைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்குசெங்கட் கருங்கயல்கள் பாயும் புகலூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுர மொரம்பா லெரியூட்டிய
எங்கள்பெம்மா னடிபரவ நாளும்மிடர் கழியுமே. 1

1. தேன்நிறைந்த மலரணிந்த கூந்தலையுடைய மடவார்கள், நீராடலால் மணம் விரவிய நீரிடையிருந்து (அவர்களது கண்களைக்கண்டு) சீற்றம் மிக்குடையதாய் கண் சிவந்திட, எழுந்து பாய்கின்ற பெரிய கயலினங்கள் மல்கி வளம்செறிந்த புகலூர்; அங்குறை சிவன்; ஓர் அம்பினாலே திரிபுரங்களை எரியும்படி செய்தோன். திங்கள் அணிந்தோன் எங்கள்பெருமான், அவனது அடியிணைகளை நாள்தோறும்பரவிடத் துன்பங்கள் நீங்கும்.

வாழ்ந்தநாளும் மினிவாழு நாளும்மிவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லிர்காள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி னான்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்க ளுங்கடுயர் தீருமே. 2

2. எம்பெருமானை எண்ணி ஏத்திடாத, நல்ல விதியில்லாதவர்களே! நாம் வாழ்ந்தநாள் இனி வாழ்வதற்கு உரியதாக வருகின்ற நாள் யாவும் உணர்வீராயின், வீணேகழிந்து (ஏத்திடாத தன்மையால்) பயனிலா நாளாயது ஆதலின், பிளந்த பிறையணிந்த சடையினன் சிவனாரது புகலூரினைப் (அப்புகலூருறை சிவனை)பற்றிய உள்ளம் உடையீர்களாக ஆவீரேல், உங்களது துன்பமெல்லாம் நீங்கும்.

மடையினெய்தல் கருங்குவளை செய்யம் மலர்த்தாமரை
புடைகொள்செந்நெல் விளைகழனி மல்கும் புகலூர்தனுள்
தொடைகொள்கொன்றை புனைந்தானோர் பாகம் மதிசூடியை
அடையவல்லா ரமருலக மாளப் பெறுவார்களே. 3

3. புகலூர்; நெய்தல், குவளை, தாமரைமலர்களோடு செந்நெல்விளைவு மல்கிய, வயல்வளஞ் செறிந்தது. அங்கு

உறை சிவன்; கொன்றைமாலையணி சடையன். அச்சடையின் ஓர்பக்கம் மதியணிந்தோன். அவனை அடைந்து ஏத்திட வல்லவர் மேலாம் உலகிடை அரசாள்வர்.

பூவுந்நீரும் பலியுஞ் சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்றேத்த லோவார்செவித் துளைகளால்
யாவுங்கேளா ரவன்பெருமை யல்லா லடியார்கடாம்
ஓவுநாளும் முணர்வொழிந்த நாளென் றுள்ளங்கொள்ளவே.

4. அடியார்கள் (பிறவியின்பயன்) புகலூருறை சிவன் பெருமையுணர்தல் என்று கண்டனர், அவ்வகை யல்லாமல் வீணேயிறந்துபடுகின்ற நாளும், அவ்வுணர் வினையொழிந்த நாளும், வீண் நாளென்று உள்ளத்தே கொண்டனர், அவ்வுளங்கொண்ட தொண்டர்கள், புகலூரினை (அங்கு உறை சிவனை) பூவொடுநீரும், பலியும், சுமந்து வழிபடுவார்களாய், நாவினாலே, நாமம் பலநவின்று ஏத்துகின்ற செயலிற் சிறிதும், குறைவிலார், செவித்துளைகளால், அவன் புகழன்றி வேறெதனையுங்கேளார். (ஓவுநாள், உணர்வொழிந்தநாள் இவ்வருட் டிருவாக்கு கொடு முடித் திருப்பதிகத்து ஆரூரரது சிந்தனைக்கும் உரியதாயிருந்தது என்பது உணர்தற்குரியது.)

அன்னங்கன்னிப் பெடைபுல்கி யொல்கியணி நடையவாய்ப்
பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன மாலும் புகலூர்தனுள்
முன்னம்மூன்று மதிலெரித்த மூர்த்திதிறங் கருதுங்கால்
இன்னரென்னப் பெரிதரிய ரேத்தச் சிறிதெளியரே. 5

5. அரச அன்னத்தொடும் புல்கிய அன்னம் அழகொடும் ஒடுங்கிய நடையனவாய், பொன்போலும் காஞ்சி மலர்க் கொம்பிலிருந்து அசைந்தாடுகின்ற பொழில்வளஞ் செறிந்தது புகலூர்; அங்குறை சிவமூர்த்தி; முன்னம்

புரமூன்றெரித்தோன், அவனது திறம் கருதின், இத் திறத்தர் என்றார்க்குப் பெரிதும் அரியர், கருதி ஏத்திடு வோர்க்கு மிகமிக எளியராகி நின்றருள்வர். இதனைக் "கருதுவார்க்கு ஆற்ற எளியான்" என்னும் ஆளுடைய அரசர் திருவாக்கானும் உணர்க.

குலவராகக் குலமிலரு மாகக்குணம் புகழுங்கால்
உலகினல்ல கதிபெறுவ ரேனும்மல ரூறுதேன்
புலவமெல்லாம் வெறிகமழு மந்தண் புகலூர்தனுள்
நிலவமல்கு சடையடிகள் பாதந் நினைவார்களே. 6

6. புகலூர்; தேன்நிறை மலர்களின் நறுமணத்தோடு குளிர்ச்சியதாய பக்கங்களை உடையதாய் அழகொடும் அமைந்தது. அங்குறை சிவனார்; திங்களொளி திகழ்கின்ற சடையுடைய அடிகள், அச்சிவனாரது திருவடிச் சிந்தனை யுடையவர்களே, உலகில் நல்லகதியினைப் பெறுபவரும் பெறுதற்கு உரியரும் ஆவர்.

ஆணும்பெண்ணும் மெனநிற்ப ரேனும்மர வாரமாப்
பூணுமேனும் புகலூர்தனக் கோர்பொரு ளாயினன்
ஊணுமூரா ரிடுபிச்சை யேற்றுண்டுடை கோவணம்
பேணுமேனும் பிரானென்ப ராலெம் பெருமானையே. 7

7. புகலூர்க்கு, ஒரு பொருளாய் உறைந்திருந்தரு ளும் எம்பெருமான், கோவணஉடையன், ஊரவரிடு பிச்சை யேற்றுண்டலைப் பேணுவோன், பாம்பினை மாலையாப் பூண்டோன், ஆணும் பெண்ணுமாய, அருட்டிருமேனி கொடுநின்று அருளிடுவோன். ஆயினும் அவனையே பிரா னென்பர் ஆன்றோர்.

உய்யவேண்டில் லெழுபோத நெஞ்சேயுய ரிலங்கைக்கோன்
கைகளொல்கக் கருவரை யெடுத்தானை யோர்விரலினால்
செய்கைதோன்றச் சிதைத்தருள வல்லசிவன் மேயபூம்
பொய்கைசூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே. 8

8. புகலூர்; பொய்கை (அகழி) சூழ்ந்து அழகொடுந் திகழ்வது, அப்புகலூரே கயிலையை எடுத்த இராவணன் அவனது, கரங்களின், வலிமைகெட, விரலொன்றினால் ஊன்றித் தம் அருட்டிறந் தோன்றச் சிதைத்து அருளிட, வல்லமை மிக்க சிவனாரது உறைவிடம்; புகழ்வதற்குரிய பொருளாகவுள்ளதும்: அங்குறைசிவபரம்பொருளே, உய்தியினை விரும்புவாயாகில் நெஞ்சமே! சென்று வழிபடுவதற்கு எழுவாயாக.

நேமியானும் முகநான் குடையநெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்
சாமிதாதை சரணாகு மென்றுதலை சாய்மினோ
பூமியெல்லாம் புகழ்செல்வ மல்கும் புகலூரையே. 9

9. திருமாலும், நான்முகனும் (அடிமுடிதேடிய அக்காலத்து) காண இயலாதமையினாலே, ஆம், எனக் கைதொழுதேத்திடும்படி ஒப்பற்ற அனல்வடிவாயினோன் சுவாமிநாதனின் தந்தை, சிவனாரது சரணங்களே, சரணாக அடைதற்குரியது. அச்சிவனது உறைவிடம்; உலகெலாம் புகழ்கின்ற, செல்வம் மல்கிய புகலூர், அப்புகலூரைத் தலைசாய்த்து வணங்குவீர்களாக.

வேர்த்தமெய்ய ருருவத் துடைவிட் டுழல்வார்களும்
போர்த்தகூறைப் போதிநீழ லாரும் புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ் சடைக்கரந்த தேவன்றிறங் கருதுங்கால்
ஓர்த்துமெய்யென் றுணராது பாதந் தொழுதுய்ம்மினே. 10

10. தீர்த்தமெல்லாம் சடையுட்கொண்டு, புகலூர் தனையிடமாக்கொண்டு, உறைந்திருந்தருளும் மாதேவன், சிவன்; அச்சிவனது திறங்களைக் கருதுங்கால், ஏனையர் ஓர்த்திடும், பொய்யினை, மெய்யென்று உணர்ந்துகொள்ளாமல், உறைப்போடு திருவடிகளைத்தொழுது உய்வீர்களாக. ஏனையர் = போதிநீழலுட்பொருந்திய புத்தர், தேரர், அமணர் முதலியோர்.

புந்தியார்ந்த பெரியோர்க ளேத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பற் பொடிப்பூச வல்லவிடை யூர்தியை
அந்தமில்லா வனலாட லானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடி யாடக்கெடும் பாவமே. 11

11. அறிவாற்சிறந்த பெரியோர்களேத்தி வழிபடுகின்ற புகலூர்; அங்குறை சிவன்; வெந்த சாம்பற்பொடியினைப் பூச வல்ல மேனியன், இடப ஊர்தியன், அந்தம் இல்லோன், அனலில் ஆடுவோன். அவனைப் போற்றி அருளிய ஞானசம்பந்தனது தமிழ்மாலை இஃது; இதனை; அன்பு மீதூரப் பாடுதலோடு ஆடிடவல்லார்கள் பாவங்களின் நீங்கப்பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

## திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருப்பதிகங்கள்

பண் – இந்தளம்

இராகம் – நாதநாமக்கிரியா] [தாளம் – ஜம்பை

திருச்சிற்றம்பலம்

செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே. 1

1. சிவந்தமேனியர், வெள்ளிய பூணூலர், துள்ளுகின்ற மானேந்திய கையினர், சிலம்பினைத் தரித்த சேவடியர். புகலூர் இடங்கொண்ட புரிசடையார், அவர்; மெய்ம்மை நெறியின் நின்றார்க்கு, தோன்றி நின்றருள்கின்ற மெய்ம்மையர். அல்லாதார்க்கு, அம்முறையின் அரியர்.

மேகந லூர்தியர் மின்போன் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையொர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. 2

2. மின்னொத்து மிளிர்கின்ற சடையினர். அச்சடையின் ஒருபாகத்தே, மதிஅணிந்தவர். அம்மதியொத்த நுதலார், உமையாரை, ஓர்பாகத்தே கொண்டவர். நாககங்கணர், நாக உடையினர், புகலூர் இடங்கொண்டுறையும், புரிசடையார். அவரே, எல்லாப்போகங்களும் ஆயவர்.

பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 3

3. புகலூர் இடங்கொண்டு உறையும் புரிசடையார் திருந்தாத மனமுடைய, பொய்யர்களது, திறத்திலே என்றும் பொருந்தமாட்டார். (திருந்திய மனமுடையார் திறத்தில்) உமையாளும், தானும், சடைமேற்பிறையணிந்த அருட்டிருக்கோலத்தராய்க் கலந்து, வீரவீற்றிருள்வர்.

அக்கா ரணிவட மாகத்தர் நாகத்தர்
நக்கா ரிளமதிக் கண்ணியர் நாடொறும்
உக்கார் தலைபிடித் துண்பலிக் கூர்தொறும்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே. 4

4. பாம்போடு என்புமாலையணிந்த மேனியர் இளநகையினர், பிறைமாலையர், புகலூரிடங்கொண்ட புரிசடையார், நாள்தோறும் உண்பலிக்கென்று பிரமனது தலையேந்திய கரத்தராய் ஊர்கள்தொறும் புகுந்திடுவர். அச்செயலில் நாணம் அடையார்.

ஆர்த்தா ருயிரடு மந்தகன் றன்னுடல்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணினல் லாளுட்கக்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற் றீருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 5

5. உலகத்துப் பொருந்திய உயிர்களையெல்லாம் அழித்த அந்தகாசூரனைப் பிளந்தார், கூர்மை பொருந்திய இரு கொம்புகளையுடைய கொலையானையை பெண்ணின் நல்லவளாய, பிறைநுதலாள் உமைவருந்த ஈர்த்து உரித்தார், உரித்த அதன் தோலினைப்போர்த்தார், புகலூர் இடங்கொண்டுறையும் புரிசடையார்.

உதைத்தார் மறலி யுருளவொர் காலால்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 6

6. புகலூர்ப் புரிசடையார் இயமனைக் காலால் உதைத்தார் தக்கன் செய்த வேள்வியைச் சிதைத்தார், பதைப்புற்று அத் தக்கனது சிரத்தோடு கரங்களை வீழ்த்தினர், அங்கு வந்திருந்த சூரியனது கண்களைப் புதையச் செய்தருளினர்.

தூமன் சுறவந் துதைந்த கொடியுடைக்
காமன் கணைவலங் காய்ந்தமுக் கண்ணினர்
சேம நெறியினர் சீரை யுடையவர்
பூமன் புகலூர்ப் புரிசடையாரே. 7

7. மீனக்கொடியோன் ஆய மன்மதனது பாணத்தின் வலிமையைக் காய்ந்துகெடச்செய்த முக்கண்ணினர், சேம

நெறியர் சிறப்பெலாம் உடையர். இப்பூவுலகில் மன்னிய புகலூர் இடங்கொண்டுறையும் புரிசடையார்.

கரிந்தார் தலையர் கடிமதின் மூன்றும்
தெரிந்தார் கணைகள் செழுந்தழ லுண்ண
விரிந்தார் சடைமேல் விரிபுனற் கங்கை
புரிந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 8

8. புகலூரிடங்கொண்டுறையும் புரிசடையார். பரந்து விரிந்தகங்கையை விரிந்த சடைமிசைப் பொருந்திட வைத்தவர். அசுரர்களது வலிய புரங்கள் மூன்றையும் எரியுண்ணும்படி அம்பினையெய்தவர் கரிந்தார், தலையர்.

ஈண்டா ரழலி னிருவருங் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார் தமென்பு மலர்க்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே. 9

9. மலர்ந்த கொன்றைமாலையோடு மாண்டார்களது எலும்பு மாலையையும், அணிந்தவர், புகலூரிடங்கொண்ட சடையர், (யாம் காண்பேம், எனத்தருக்குற்ற) திருமாலும் பிரமனும், அடியோடு முடியினைக் காண இயலாத அந் நிலையில். யாவரும் அஞ்சும்படி, நெடுந்தடுமாற்ற நிலை உற்று அஞ்சினர், அஞ்சிய அவ்விருவரும், கைதொழுது போற்றிடச் செறிந்து; பொருந்திய அழல்வடிவாகி நீண்டனர்.

கறுத்தார் மணிகண்டங் கால்விர லூன்றி
இறுத்தா ரிலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலனைந்து மாயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 10

*10. புகலூரிடங்கொண்டுறையும் புரிசடையார், வீடமுண்டு கறுத்தழகிய நீலகண்டர் இலங்கையரசனது முடிகள் பத்தும் நெறியும்படித் திருவடி விரலால் ஊன்றியவர். புலன்களது செயல்களை ஒழித்தவர். புண்ணியவடிவினள் உமையை ஓர்பாகத்தே தாங்கி; அருள்பவர்.*

*திருச்சிற்றம்பலம்*

*பண் – திருநேரிசைக்கொல்லி*

*இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி*

*திருச்சிற்றம்பலம்*

பகைத்திட்டார் புரங்கண்மூன்றும் பாறிநீ றுகிவீழப்
புகைத்திட்ட தேவர்கோவே பொறியிலே னுடலந்தன்னுள்
அகைத்திட்டங் கதனை நாளு மைவர்கொண் டாட்டவாடித்
திகைத்திட்டேன் செய்வதென்னே திருப்புகலூரனீரே. 1

*1. அறிவில்லேன், உடலுட்பொருந்திய ஐவர் அவ்வுடலை அயர்வுறும்படி ஆட்டுகின்றனர். அவ்வழி யானும் திகைப்புற்றேன். பகைத்திட்ட அசுரர்களது புரங்களை நீறுகி வீழும்படிப் புகையெழச்செய்த தேவர்தலைவா, திருப்புகலூரிடங்கொண்ட சிவனே, என்செய்வேன்.*

மையரி மதர்த்தவொண்கண் மாதரார் வலையிற்பட்டுக்
கையெரி சூலமேந்துங் கடவுளை நினையமாட்டேன்
ஐநெரிந் தகமிடற்றே யடைக்கும்போ தாவியார்தாம்
செய்வதொன் றறியமாட்டேன் திருப்புக லூரனீரே. 2

2. மைதீட்டிய கண்களையுடைய மாதரார்களது வலையிற்பட்டு (அவ்வழிமயங்கி) அனலோடு சூலமேந்தும் அண்ணலை நினையகில்லேன், (வீணே இளைத்து இறுதியில்) அகத்தினுள்ளே கோழைமிகுந்து மிடற்றினை, அடைக்கும்போது, பொருந்திய உயிரார், யாதுசெய்வர் அறியமாட்டேன், புகலூரிடங்கொண்டுறையும் புனிதன் நீரே, அருள்வீராக.

முப்பது முப்பத்தாறு முப்பது மிடுகுரம்பை
அப்பர்போ லைவர்வந்து வதுதரு கிதுவிடென்று
ஒப்பவே நலிய லுற்று லுய்யுமா றறியமாட்டேன்
செப்பமே திகழுமேனித் திருப்புக லூரனீரே. 3

3. திருப்புகலூரிடங்கொண்டுறையும் செம்மை மேனிச் சிவபெருமானே இவ்வுடம்பு தொண்ணூற்றாறு தத்துவங்களால் ஆயது. அதனுள் வாழ்பவர் உடலாய, குடிசைத் தலைவர் இந்திரியங்கள் ஐவர். அவர்கள் தந்தையைப்போல அது தருக இதுவிடுக என்று, செயலாற்றி நலியும்படி செய்கின்றனர். அவ்வழி நலிவுறும்போது உய்யும்வழி அறியகில்லேன் அருள்வீராக.

பொறியிலா வழுக்கையோம்பிப் பொய்யினை மெய்யென்
றெண்ணி நெறியலா நெறிகள்சென்றே னீதனே நீதியேதும்
அறிவிலே னமரர்கோவே யமுதினை மனனில் வைக்கும்
செறிவிலேன் செய்வதென்னே திருப்புக லூரனீரே. 4

4. திருப்புகலூர் இடம்கொண்டுறையும் இறைவா, ஒழுங்கிலாத அழுக்குடலை ஓம்பினேன் பொய்யினை மெய் யென எண்ணினேன். நெறியலா நெறிகளில் சென்றேன். நீதி எதுவும் அறியகில்லேன் நீசனேன் அமரர் தலைவா.

நினைவார்க்கு அமுதேயாயநின்னை, மனதில்வைத்து சிந்திக்கும் செறிவில்லேன் என்செய்வேன்.

அளியினார் குழலினார்க ளவர்களுக் கன்பதாகிக்
களியினார் பாடலோவாக் கடலூர்வீ ரட்டமென்னும்
தளியினார் பாதநாளுந் நினைவிலாத் தகவில்நெஞ்சம்
தெளிவிலேன் செய்வதென்னே திருப்புக லூரனீரே. 5

5. வண்டுகள் பொருந்திய கூந்தலையுடைய மடவார்களுக்கே, அன்புடையனாயினேன். 'களிப்பின் எழுகின்ற பாடல் ஓசை மல்கிய கடலூர் வீரட்டானத்து இறைவனது பாதங்களை நாள்தோறும் நினைவிலன் ஆயினேன். அந் நினைவுகொள்ளாமையினால். நெஞ்சம் தகுதியோடுதெளிவுமிலதாயது (அன்புகொளும் செயல் அன்பிலதாயவழி, நெஞ்சம் தெளிவிலதாயது) என்செய்வேன் புகலூர் இடங்கொண்ட புனிதா.

இலவினார் மாதர்பாலே யிசைந்துநா னிருந்துபின்னும்
நிலவுநாள் பலவென் றெண்ணி நீதனே னாதியுன்னை
உலவிநா னுள்கமாட்டே னுன்னடி பரவுஞானம்
செலவிலேன் செய்வதென்னே திருப்புக லூரனீரே. 6

6. புகலூர் இறைவ; மாதரார்பால் இசைந்து இருந்து பெறும் சிற்றின்பத்தினையே பின்னும் பின்னும் எண்ணி எண்ணி நிலவும்நாள் பலகழித்த நீதனேன். ஆதியாய உன்னை உள்கிடவும் மாட்டேன். உனது அடிபரவுகின்ற ஞானத்தையும் விரும்பாதவனாயினேன். என்செய்வேன்.

காத்திலே னிரண்டுமூன்றுங் கல்வியே யில்லையென்பால்
வாய்த்திலே னடிமைதன்னுள் வாய்மையாற் றூயேனல்லேன்
பார்த்தனுக் கருள்கள்செய்த பரமனே பரவுவார்கள்
தீர்த்தமே திகழும்பொய்கைத் திருப்புக லூரனீரே. 7

7. அருச்சுனர்க்கருளிய பரமா. தீர்த்தங்கள் திகழ் திருப்புகலூரா உனதருளைப் பெறுதற்கு புலனடக்கம். நல்ல கல்வி, கேள்விவாய்த்த அடிமை. வாய்மை, தூய்மை. யாதுமில்லேன். என்செய்வேன்.

நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி
ஏருடைக் கதிர்களாகி யிமையவ ரிறைஞ்சநின்று
ஆய்வதற் கரியராகி யங்கங்கே யாடுகின்ற
தேவர்க்குந் தேவராவார் திருப்புக லூரனாரே 8

8. திருப்புகலூர் இறைவர், விண்முதற் பூதங்களாகி ஆங்காங்கு திகழ்கின்ற ஒளிகளாகி ஆய்தற்கும் அரியராகி இமையவர்கள் இறைஞ்சிப்போற்றிட அங்கங்கே யியங்குகின்றதேவர்கட்கெலாம் தேவராய்நின்ற பெருமான் ஆவர்.

மெய்யுளே விளக்கையேற்றி வேண்டள வுயரத்தூண்டி
உய்வதோ ருபாயம்பற்றி யுகக்கின்றே னுகவாவண்ணம்
ஐவரை யகத்தேவைத்தீ ரவர்களே வலியர்சாலச்
செய்வதொன் றறியமாட்டேன் திருப்புக லூரனீரே. 9

9. புகலூர்ப்பெருமானே. உய்தற்கு உபாயமாக இவ்வுடலகத்தே. ஞானமாய விளக்கினையேற்றி, அதனை வேண்டுமளவிற்கு உயரும்படி தூண்டி ஒளிபெறச்செய்து அதனையேபற்றி இருந்து மகிழ்கின்றேன். அம்மகிழ்வினைப் பெறுதவண்ணம். (அதற்கு இடையூறே புரிகின்ற) ஐவரை (பஞ்சேந்திரியர்களை) உடனுற, நீரே யமைத்து வைத்தீர். அவர்களே (தங்கள் வழியீர்த்துச் செல்வதில்) மிகவலியர். யாதுசெய்வேன், யாதொன்றும் அறியகில்லேன்.

அருவரை தாங்கினானு மருமறை யாதியானும்
இருவரு மறியமாட்டா ஈசனா ரிலங்கைவேந்தன்
கருவரை யெடுத்தஞான்று கண்வழி குருதிசோரத்
திருவிரல் சிறிதுவைத்தார் திருப்புக லூரனாரே. 10

*10. திருப்புகலூர் ஈசனார் இராவணன் கயிலையைப் பெயர்த்தபோது, அவன் கண்வழியே குருதி சோரும்படி திருவிரலைச் சிறிது ஊன்றியவர். மாலோடு பிரமன் காணாத மாண்பினர்.*

*திருச்சிற்றம்பலம்*

பண் – திருவிருத்தம் கொல்லி

*இராகம் – நவரோஸ்]* *[தாளம் – திரிபுடை*

*திருச்சிற்றம்பலம்*

தன்னைச் சரணென்று தாளடைந் தேன்றன் னடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே. 1

*1. புகலூர் இறைவர் செயல் கேண்மின். அவன் திருவடிகளையே சரண் என அடைந்தேன். அடைந்த என்னை பிறப்போடு வினைக்கட்டுகளை ஒழித்து (அவ்வழி அவைகளை நீங்கிடப் பெறுவழி வந்துறுகின்ற) ஏழு நரகங்களிடைக்கிடந்து துன்புற விட்டுவிடாமல் தனது உலகிடை என்றும் இருந்து இன்புற அருளிடுவன். அவ்வழிஉன்னிடுவீர்களாக.*

பொன்னை வகுத்தன்ன மேனிய னேபுணர் மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன் பாகத்த னேதமி யேற்கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங் கும்புக லூரரசே
என்னை வகுத்திலையே யிடும் பைக்கிடம் யாதுசொல்லே. 2

2. புன்னைமலர்த் தலையில் வண்டுகள் உறங்குகின்ற பூம்புகலூர் அரசே. துன்பத்திற்கு இருப்பிடமாகவோ; என்னை வகுத்தமைத்தனை, (அவ்வாறிலாது) பொன்னொத்த மேனியனே. புணர்முலையாள் உமையொரு பாகனே தமியேற்கு இரங்கி அருள்புரிவீராக.

* * * * 3

பொன்னள வார்சடைக் கொன்றையி னய்புக லூரரசே
மன்னுள தேவர்க டேடு மருந்தே வலஞ்சுழியாய்
என்னள வேயுனக் காட்பட் டிடைக்கலத் தேகிடப்பார்
உன்னள வேயெனக் கொன்று மிரங்காத வுத்தமனே. 4

4. பொன்னொத்த கொன்றையணி புன்சடையினய் பூம்புகலூர் அரசே. தேவர்கள் தேடுகின்ற மருந்தே. வலஞ் சுழியாய், உனக்கு ஆளாகி உனக்கும் எனக்கும் இடையில், நிற்கின்ற சிவத்துவம் பெற்றவர்கள் உன்னளவே யாவர். எனக்கும் இரங்கி யருள்புரிவீராக.

* * * * 9

ஓணப் பிரானு மொளிர்மா மலர்மிசை யுத்தமனும்
காணப் பராவியுங் காண்கின் றிலர்கர நாலைந்துடைத்
தோணப் பிரானை வலிதொலைத் தோன்றொல்லை நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே. 10

10. திருவோணத்திற்குரிய மாலும் மலரயனும் காணுதற்கு என பல்காற் பரவியும் காணகிற்றிலர். இராவணனது வலிமைகெட அழித்த, இறைவரது, புகலூர் இஃது; இங்கு கோணப்பிரானை அடையின், கொடிய வினைகளும் அடையாதன ஆம்.

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தொகை

இராகம் – நாதநாமகிரியா] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

துன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி
பொன்னக் கன்ன சடைப்புக லூரரோ
மின்னக் கன்னவெண் டிங்களைப் பாம்புடன்
என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே. 1

1. கோவண ஆடையர் நீறணிந்த மேனியர் பொன்னொத்த சடையினர் புகலூரர் வெள்ளிய திங்களை பாம்புடன் ஒருசேர வைத்திருப்பது எதற்காகவோ.

இரைக்கும் பாம்பு மெறிதரு திங்களும்
நுரைக்குங் கங்கையு நுண்ணிய செஞ்சடைப்
புரைப்பி லாத பொழிற்புக லூரரை
உரைக்கு மாசொல்லி யொள்வளை சோருமே. 2

2. பாம்பு திங்கள் கங்கையினை படர்சடையில் தரித்த பரமன் புகலூர் அரசினைப் (எண்ணி) போற்று

மாறுபோற்றி எமது ஒள்ளிய வளையணிந்த பெண் சோர்கின்றனள்.

ஊச லாமர வல்குலென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டன
ரோசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூச னுமிடு தும்புக லூரர்க்கே. 3

**3.** ஊசலொத்து ஆட்டுறுகின்றனள். குழல் சரிவுற்றனள். ஊரெலாம் ஏசிட பழியினைத்தந்து அழகினைக் கவர்ந்தனர் புகலூரர்; மகளே, முறையோ என்று அப்புகலூர்த் தலைவரிடத்தேயே சொல்வாயாக, நாம் பூச லிடுவோம்.

மின்னி னேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப்பி லாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே. 4

**4.** உமைமணாளனை தன்னொப்பில்லாத் தலைவனை, புன்னைப் பொழில்சூழ் புகலூரனை என்னுள்ளத்தேயே பொருந்திடவைத்து இன்புற்றிருப்பேன்.

விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்க ளோதி யெழுத்தஞ்சும்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமெ னெஞ்சுமே. 5

**5.** பிறைசூடிய தலைவனை, அத்தலைவன்தன், நாம எழுத்தஞ்சினை எண்ணி, ஓதி அதன்பயனாகக் கண்களால் காணப்பெறுகின்ற அவன் அடியிணைகளைக் காணுமிடம் எதுவெனின், என் நெஞ்சமும் புகலூருமேயாம்.

அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு
பண்டு நான்மறை யோதிய பாடலன்
தொண்ட ராகித் தொழுது மதிப்பவர்
புண்ட ரீகத்து ளார்புக லூரரே. 6

6. வேதமோதிய வித்தகன் தேவர்கள் அமுதுண்ணு தற்காகத், தான் அந்நாள் நஞ்சினையுண்டவன் புகலூரிடங் கொண்டோன். சிவன் அவன்; தொண்டராகி நின்று தன்னை மதிப்பார்களது உள்ளக் கமலத்திலே வாழ்பவன்.

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் றண்புக லூரனே. 7

7. தத்துவங்களின் முடிவறிந்தாரும் அரிய இயலாத பெரியோன். தத்துவத்தின் தலை நின்றார்க்கலது, உடன் பொருந்தி யருள்கின்ற தத்துவனல்லன் புகலூரன்.

பெருங்கை யாகிப் பிளிறி வருவதோர்
கருங்கை யானைக் களிற்றுரி போர்த்தவர்
வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானைகண் டீர்புக லூரரே. 8

8 புகலூரர். பிளிறிக் கொண்டுவந்து எதிர்ந்த யானையை உரித்துப் போர்த்தவர். நம்முடனிருந்து நம்மை யெதிர்ந்து, வருத்துகின்ற ஐந்து புலன்களாகிய யானைகளையும் பொருதிடுவர். அஞ்சற்க.

பொன்னொத் தநிறத் தானும் பொருகடல்
தன்னொத் தநிறத் தானு மறிகிலாப்
புன்னைத் தாது பொழிற்புக ரலூரை
என்னத் தாவென வென்னிடர் தீருமே. 9

9. பிரமனும் மாலும் (பொன், கடல் - நிறவுவமை) அறிகிலாப்பெரியோன் புகலூர் இறைவனை, என் அத்தா. என்று ஒருதரம் கூறிட இடரெலாம் நீங்கிடும்.

மத்த னாய்மதி யாது மலைதனை
எத்தி னான்றிர டோண்முடி பத்திற
ஒத்தி னான்விர லாலொருங் கேத்தலும்
பொத்தி னான்புக லூரைத் தொழுமினே. 10

10. மதியாது கயிலையை எடுத்த இராவணனது முடிகளொடு - தோள்கள் இற்றிட, திருக்கால், திருவிரல் ஒன்றினை இலேசாக ஊன்றினன். பின் அவன் ஏத்திடல் கண்டு. (அழுதவாயினை) பொத்தி - அழாதவாறு அருளினன். சிவன் - அவனது புகலூரைத் தொழுவீர்களாக.

திருச்சிற்றம்பலம்

பண் – திருத்தாண்டகம்

[இராகம் – அரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
எம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்

ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

**1. புகலூர்ப்புண்ணியா எண்ணுவதெல்லாம் உன் திருவடி,களைகளுக உள்ளது காண்பது, எல்லாம் அவ்இணையடி, இவ்வுடலத்தை ஒன்பது வாயிலொடும் அமைத்தவன் நீ, ஒருசேர இறுதியில் அவை (செயற்பாடிலாது) அடைபடும்போது ஒன்றும் உணரகில்லேன் ஆதலின் உன் அடியிணைகளையே உறுகின்றேன் என்றுகொள்.**

அங்கமே பூண்டா யன லாடினு
யாதிரையா யானிழலா யானே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினய்
பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே யுன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

**2. ஆதிரை நாளாய், அனலில் ஆடுவோய், என் பணியாய் ஆலடியாய் இடபஊர்தியானே சடையினய் பாம்பொடு திங்களைப் பகையின்றி அமைத்த பரமேட்டி நஞ்சுண்டு சாவாத பிறவாத சிங்கமொத்த செல்வா! உன்னடிக்கே போதுகின்றேன்.**

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை யேந்தினய் வஞ்சக் கள்வர்

ஐவரையு மென்மேற் றர வறுத்தா
யவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

3. அரவக்கச்சு - வெண்ணிறந்தமேனி குழைதிகழ் திருக்காது மானேந்திய கரங்கள் ஒருபங்கில் உமை, திகழத் திகழ்கின்ற திருப்புகலூர் இறைவா என் உடன் உறை (இந்திரியங்களாய) வஞ்சக்கள்வர் ஐவர். விரும்பும் அவர் செயல்கள் அடியேனிடத்து எதுவும் இல்லை. இஃது பொய் யில்லை. உன்னடிக்கே போதுகின்றேன்.

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி யாதியாய் வேத மாகி
யலர்மேலா னீர்மேலா னைந்துங் காணாப்
பொருளாவா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 4

4. முப்புரம் செற்றமூர்த்தி மயங்காதார் மனத்தின் கண் உறுகின்ற வருத்தம் தீர்ப்பாய். மருந்தாகி நின்று பிணியினைத் (பிறப்பிறப்பு) தீர்த்தருள்வாய். அருளாளன் வேதமாதி சோதிநீ, மலரவனும் மாலும் காணாத பெரும் பொருளே போதுகின்றேன்.

நீரேறு செஞ்சடைமே னிலாவெண் டிங்க
ணீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா

காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவைக் கதறப் போர்த்த
போரேறே யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

**5. திங்களை என்றும் விளங்க அணிந்த நியதியாய் தலையோட்டிற் பலிகொள்வோய். காமதகனு, நீலகண்டா, யானையுரிபோர்த்த புகலூர்ப்போரேறே. உன்னடிக்கே போதுகின்றேன்.**

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்க ளெரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டான மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

**6. வெண்காடு, மீயச்சூர், ஆரூர் மூலட்டானம் அம்பர், மாகாளம், வலஞ்சுழி மறைக்காடு, ஆயதலங் களிலும் உறைந்தருளும். விரிசடையாய் வேதகீதா, திரிபுராந்தகனே. மருவுதற்கினியார் மனத்துட் பொருந்து கின்ற மன்னு புண்ணியனே போதுகின்றேன்.**

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனு மிந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

7. மால் அயன் இந்திரன் ஆய தேவர்களெலாம் திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று போற்றுகின்றனர். கடவுளே அத்தகைய நினது அடியிணைக்கே புகுகின்றேன்.

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
    நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
    மான்றோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
    கொண்டடியே னிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

8. நெய்யாடியப்பா, நீலகண்டா, உமையொருபாகா, மானுரியாடையானே, கொன்றையொடு கூவிளமும் அணிந்த புகலூரா என்று கூறியவனாகி (அங்ஙனம் கூறுவார்க்கு அருளுவதிற்) பொய்யாத திருவடிக்கே புகுகின்றேன்.

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
    துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பு நீருஞ்
    சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
    யக்காரம் பூண்டானே யாதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

9. சடைமிசைத் தண்மதியோடு கங்கையும் பாம்பும் அணிந்த கடவுளே; மழுவாட்கொண்ட கையாய்,

வெண்ணீறணிந்த மேனியாய் கோவணவுடையினாய் அன்னநடை உமை மடவாள்பங்க உன் பொன்போலும் அடியிணைகளிலே போதுகின்றேன்.

ஒருவனையு மல்லா துணரா துள்ள
முணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையு மூவரையு மென்மே லேவி
யில்லாத தரவறுத்தாய்க் கில்லே னேலக்
கருவரைசூழ் கான லிலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

*10.* புலன்களின் செயல்கட்குரியனல்லேன். உன்னை யல்லாது உணராத உள்ளமுடையேன். இலங்கை அரசனைச் செற்ற காலினாய், திருக்கயிலையாய் புகலூர் மேவிய புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என்று அருளுவீராக.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருப்பதிகம்

பண் – கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோக மாள்வதற் (கு)
யாதுமையுற வில்லையே. 1

1. பொருள்வேண்டிப் பொய்மையாளர்களை நாடி, பாடல் பலகொண்டு உலகிடையே இச்சகம் பலபேசி, புகழ்ந்து போற்றிடினும், தொண்டர்களுக்கு தாராத, அவர்கள்பால் சிறிதும் பயனுருது, பாடிஅயர்கின்ற புலவர்களே, புகலூரைப் பாடுவீர்களாக, பாடுவீராயின் இம்மையில் சோறுடு, கூறையும், இடர்கெடுதலும், ஆகும். அம்மையில் சிவன் உலகினை ஆளலும் கூடும், ஐயமில்லை.

மிடுக்கிலாதானை வீமனேவிறல் விசையனே
வில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை
பொடிக்கொண் மேனியெம் புண்ணியன்எந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

2. புலவர்காள்: வலிமையில் வீமன். வில் வித்தையில் அருச்சுனன். கொடுப்பதில் பாரி வள்ளல் என்று கொடாதானையே புகழ்ந்து, புகழ்ந்து எவ்வளவுதான் பாடினாலும், கொடுக்கமாட்டார் (ஆதலின் யாவும் தருவானாய) பொடியணிந்த மேனியன். புண்ணியன் புகலூர் எந்தையினைப் பாடுமின். பயனாக மேலுலகங்களையும் ஆட்சிகொளலாம். ஐயமில்லை.

காணியேற்பெரி துடையனே கற்றுநல்லனே
சுற்ற நன்கிளை
பேணியேவிருந் தோம்புமே யென்று
பேசினுங் கொடுப்பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண் புகலூர்
பாடுமின் புலவீர்காள்
ஆணியா யமருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 3

3. புலவர்களே காணிகள் மிகவுடையன். கற்றவன், நல்லவன். உறவோம்பும் உத்தமன், விருந்தோம்பும் வித்தகன் என்று பலபல பேசினாலும் தருபவர் இல்லை. ஆதலின் பறவைகள் அலம்புதல் செய்கின்ற பொழில்

வளம்செறிந்த புகலூரைப்பாடுமின். நிச்சயமாக அமருலகத்தை ஆட்சி கொள்ளலாம் சிறிதும் ஐயமில்லை.

நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல்
நடுங்கிநிற்கு மிக் கிழவனை
வரைகள்போற் றிரள்தோளனே யென்று
வாழ்த்தினுங் கொடுப்பாரிலை
புரைவெள்ளேறுடைப் புண்ணியன்புக
லூரைப்படுமின் புலவீர்காள்
அரையனாயம ருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 4

4. புலவர்களே நரைப்பு, மூப்புவந்து உடல் தளர்ந்து, நடுங்குகின்ற கிழவனை மலைபோல் தோளன் என்று வாழ்த்தினாலும், கொடுப்பாரில்லை ஆதலின்; வெள்ளேறுடையான் புகலூர்ப் புண்ணியனைப் பாடுமின், பயனாக, மேலுலகில் சென்று அரசனாகி வாழலாம். ஐயம் இல்லை.

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்
பாவியை வழக்கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவே யென்று
பாடினுங் கொடுப்பாரிலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 5

5. புலவர்களே? வஞ்சநெஞ்சன் குற்றமேபுரிவோன் பாவி, நியதியொன்றும் இல்லோன் (பஞ்சமா பாதகனாய) துட்டனைச் சாதுவென்று பாடினாலும், ஒன்றும்கொடான்.

ஆதலின் நெஞ்சிலே பொருந்துகின்ற, நோய் அவைகளை ஒழித்து, உய்திபெறலாம் சந்தேகம் இல்லை. அதற்கு உபாயம் ஆக, பொன்போலும் சடையுடை புகலூர்ப் புண்ணியனைப் பாடுவீர்களாக.

நலமிலாதானை நல்லனே என்று
நரைத்தமாந்தரை இளையனே
குலமிலாதானைக் குலவனே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை
புலமெலாம் வெறி கமழும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமராதம ருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 6

6. நலமேயில்லாதானை, நல்லன் என்றும், நரைப் பொடு மூப்புற்ற மனிதரை இளையன் என்றும், குலத்தின் வாராதவனை நல்ல குலத்தினன் என்றும் கூறினாலும் கொடுப்பார் ஒருவரும் இலர், ஆதலின் அவ்வழி அயற்சி யுறாது மணங்கமழ்கின்ற பக்கங்களையுடைய புகலூர் இறைவனைப் பாடுமின் புலவீர், அமருலகம் ஆட்சி கொள்ளலாம் ஐயம் இலை.

நோயனைத்தடந் தோளனே யென்று
நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றேபுல வோர்க்கெலா மென்று
சாற்றினுங் கொடுப்பாரிலை
போயுழன்றுகண் குழியாதே யெந்தை
புகலூர்பாடுமின புலவீர்காள்
ஆயமின்றிப்போ யண்டமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 7

7. நோயுடையானைத் திண்ணிய தோளனென்றும், அற்பனை மேலோனென்றும், புலவர்கட்கெல்லாம் தாய்

என்று, சாற்றினும் கொடுப்பார் ஒருவரிலர். (அவ்வகை கொடாத மனிதர்களது இல்லங்களில்) சென்று உழன்று கண்குவிந்து. வருந்தாமல், புகலூரைப் பாடுமின் புலவர்களே ஐயமின்றி அண்டத்தையும் ஆளலாம்.

எள்விழுந்திடம் பார்க்குமாகிலும்
　　ஈக்குமீகில னாகிலும
வள்ளலேயெங்கள் மைந்தனே யென்று
　　வாழ்த்தினுங் கொடுப்பாரிலை
புள்ளெலாஞ் சென்றுசேரும் பூம்புக
　　லூரைப்பாடுமின் புலவீர்காள்
அள்ளற்பட்டழுந் தாதுபோவதற்
　　கியாதுமையுற வில்லையே. 8

8. சிறிய ஈக்களுக்கும் ஈயாதலோபி, தவறிவிழுந்த எள்ளினையும் தேடிப்பார்க்கும் அற்பன், அப்பொருளாளர்களை வள்ளலென்றும், மைந்தனென்றும், வாழ்த்தினும் ஒன்றும் கொடுப்பாரிலர். ஆதலின் புலவர்களே, அவ்வழிச் சென்று துன்பமாகிய சேற்றில் அழுந்திவருந்தாது, புள்ளினங்கள் பொருந்துகின்ற பொழில்வளம் செறிந்த பூம்புகலூர் இறைவனைப் பாடுமின் உய்யலாம் ஐயமில்லை.

கற்றிலாதானைக் கற்றுநல்லனே
　　காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முத்தனே யென்று
　　மொழியினுங் கொடுப்பாரிலை
பொத்திலாந்தைகள் பாட்டருப்புக
　　லூரைப்பாடுமின் புலவீர்காள்
அத்தனாயம ருலகமாள்வதற்
　　கியாதுமையுற வில்லையே 9

9. கல்லாதவனை கற்றோனென்றும் மன்மதனென்றும், முற்றுப்பெற்ற அறிவனென்றும், மொழிந்திடினும் கொடுப்பார் இலர். ஆதலின் யாவுந் தருவானாய புகலூர்

இறையவனைப் பாடுமின்புலவீர் அமருலகம் ஆளலாம் ஐயமில்லை.

தையலாருக்கோர் காமனேசால
நல்வழக்குடை யையனே
கையுலாவிய வேலனேயென்று
கழறினுங் கொடுப்பாரிலை
பொய்கை வாவியின் மேதிபாய்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 10

10. மாதரார் விரும்பிடும் மதனொத்த அழகினன், வேலன் என்று கூறினும் கொடுப்பார் இலர். ஆதலின், எருமைகள் பாய்ந்து ஆடுகின்ற நீர்வளம் செறிந்த புகலூர் இறைவனைப் பாடுமின் அமருலகம் ஆளலாம் புலவீர் ஐயமில்லை.

செறுவினிற்செழுங் கமலமோங்குதென்
புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன்
வனப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய
பாடல்பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்றுசேர்வதற்
கியாதுமையுற வில்லையே 11

11. கமலங்கள் ஓங்கிய அழகிய புகலூர்ச் செல்வனை, நாவலூரன் வனப்பகையம்மையாரின் தந்தை, சடையனாரின் புதல்வன் வன்தொண்டன் ஆரூரன், அருளிய இப் பத்தினையும் வல்ல அடியவர் அறவடிவனாய புகலூர் அண்ணலார் அடியிணைகளைச் சார்ந்து இன்புறுவர் ஐயமில்லை.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருப்பதிகம்

பண் – பியந்தைக்காந்தாரம்

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்.

பட்டம் பானிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்ட நள்ளிரு ளாடு நாதனர் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும் பூம்புக லூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமா னீச்சரத் தாரே. 1

1. புகலூர்; பெட்டையொடும் பொருந்திவிளையாடல் புரிகின்ற பறவையினங்கள்மல்கிய பொழில்வளச் செறிவுடையது. அங்கு வர்த்தமானீச்சரத்து உறையும் சிவனர், பட்டத்தோடு பாலொத்த பிறை திகழும் சடையர், சுடர்விடுகின்ற அனலேந்திய கையர், நடுநல் இருளில் நடனம் புரிந்திடும் நாதர், அவரை தொண்டர் கூட்டங்கள் வலம் வந்து சூழ்ந்து அடியிணைகளைப் பரவிப் போற்றுகின்றனர்.

முயல்வ ளாவிய திங்கள் வாண்முகத் தரிவையிற் றெரிவை
இயல்வ ளாவிய துடைய இன்னமு தெந்தையெம் பெருமான்
கயல்வ ளாவிய கழனிக் கருநிறக் குவளைகண் மலரும்
வயல்வ ளாவிய புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 2

2. உலாவிடுகின்ற மீனினங்களோடு; கருங்குவளை மலர்கள் திகழ்கின்ற, வயல்களாற் சூழ்வுண்டு, வளம் சார்ந்தது புகலூர்; அங்குறை வர்த்தமானீச்சரத்துச் சிவனுர், தெரிவை உமையம்மையாரின் எழிற்றன்மை வளாவியதுடைய, இனிய அமுதமுமாய எந்தை முயற் கறைபொருந்திய திங்களொத்த ஒள்ளிய முகத்தையுடை அரிவை, அத்தெரிவை, (திங்கள் - வதனத்திற்குவுவமை)

தொண்டர் தண்கய மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 3

3. புகலூர்; தேனுண்ட வண்டுகளது பண்ஓசை யோடுந் திகழ்வது, அங்குறை வர்த்தமானீச்சரம்; கண்டு தரிசித்த அன்பர்களது கண்கள் குளிர்ந்திடக் களிப்பினைப் பெருக்கிடுவதாகி, முருக நாயனரது அன்பொளிகொண்டு சிறந்திடுகின்ற திகழ்வினையுடையது. அவ்வர்த்தமானீச் சரத்து, உறைந்தருளும்பெருமான், நீரில்மூழ்கி, தூபமோடு சாந்தமும் மாலையும் கொண்டு, நாள்தோறும் அடிபரவி, குறிப்பறிந்து, முருகனர் ஆய தொண்டர் செய்தமைத்துப் போற்றி வழிபட்ட அருட்டிருக்கோலத்தர்.

பண்ண வண்ணத்த ராகிப் பாடலொ டாடல றுத
விண்ண வண்ணத்த ராய விரிபுக லூரரோர் பாகம்
பெண்ண வண்ணத்த ராகும் பெற்றியொ டாணிணை பிணைந்த
வண்ண வண்ணத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத் தாரே.

4. வர்த்தமானீச்சரத்தார்; பெண்ணின்வண்ணம் ஒரு பாகம் திகழ, ஆண்வண்ணம் பிணைந்த அருட்டிருவண்ணக் கோலத்தர், பாடுதலொடு ஆடுதலும்புரி வண்ணத்த ராகிய புகலூரர்.

ஈச னேறமர் கடவு ளின்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர் பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்ற முருகன்முப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. 5

5. விளக்கம்மிக்க அழகிய; புகலூர் வர்த்தமானீச்சரத்து இடங்கொண்டுறையும் ஈசன்; வண்டுகள் ஓசை செய்கின்ற, கொன்றைமாலை திகழ்கின்ற முடியினர், அம் முடிமேல் முருகனுர் ஆக்கி அமைத்துச் சாத்திய நறுமணம் கமழ்கின்ற நல்ல மலர்களையும் உடையார் மாசிலாத நீற்றினை மேனியில் அணிந்தவர், இடப ஊர்தியர். அமுதம் ஒத்த எந்தை.

தளிரி ளங்கொடி வளரத் தண்கய மிரியவண் டேறிக்
கிளரி ளம்முழை நுழையக் கிழிதரு பொழிற்புக லூரில்
உளரி ளஞ்சுனை மலரு மொளிதரு சடைமுடி யதன்மேல்
வளரி ளம்பிறை யுடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. 6

6. புகலூர்; குளிர்ந்தநீர் நிறைந்த குளத்திலிருந்து தளிரொடும் தோன்றிய கொடியானது, வளர்ந்திட, அதன் வழி ஏறிய வண்டுகள், அடர்ந்து பொருந்தியபொழில் வளச்செறிவு கிழியும்படி நுழைகின்ற எழில் மிக்குடையது அங்கு வர்த்தமானீச்சரத்து உறைந்தெழுந்தருளும் பெருமான், சுனையில் மல்கிய செங்கழுநீர் மலர்களோடு, ஒளி திகழ்கின்ற சடாமுடிமிசை, வளர்பிறைச் சந்திரனையும் அணிந்தவர்.

தென்சொல் விஞ்சமர் வடசொற் றிசைமொழி யெழினரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிரு ணீங்கத் தொழுதெழு தொல்புக லூரில்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய வலைகடல் கடையவன் றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர் வர்த்தமா னீச்சரத் தாரே. 7

7. புகலூர் வர்த்தமானீச்சரத்துப்பெருமான்; மை யொத்து அன்று கடலிடைத் தோன்றிய விஷத்தினை உண்ட நீலகண்டர், அப்புகலூர்; பயனிலாது வீணே இறந்துபடுவதற்குக் காரணமாகி நெஞ்சினைப்பற்றி வருத்துகின்ற ஆணவமல இருள்நீக்கம் வேண்டி, தென் சொல் (தமிழ்) லோடு மற்றெல்லாத் திசைகளுக்குமுரிய எல்லாமொழிகளைக்கொண்டும், நரம்புக்கருவி வாத்திய ஓசைகளோடு யாவரும் தொழுதெழுகின்ற சிறப்போடுந் திகழ்வது.

சாம வேதமோர் கீத மோதியத் தசமுகன் பரவும்
நாம தேயம துடையார் நன்குணர்ந் தடிகளென் றேத்தக்
காம தேவனை வேவக் கனலெரி கொளுவிய கண்ணர்
வாம தேவர்தண் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 8

8. திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தார்; அம் மன் மதனை நன்கு உணர்ந்து, அடிகளென்று ஏத்தி, வணங்கிட எரித்த கண்ணினர். வாமதேவர் சாமவேதம் ஓதி, இராவணன் பரவிடும் நாமம் உடையார்.

சீர ணங்குற நின்ற செருவுறு திசைமுக னோடு
நார ணன்கருத் தழிய நகைசெய்த சடைமுடி நம்பர்
ஆர ணங்குறு முமையை யஞ்சுவித் தருளுதல் பொருட்டால்
வார ணத்துரி போர்த்தார் வர்த்தமா னீச்சரத் தாரே. 9

9. புகலூர்வர்த்தமானீச்சரத்து ஈசனர்; உடன் உறை உமையாளை, அஞ்சும்படிசெய்து, பின் அருள்புரிதல் காரணமாக, யானையுரியினைப் போர்த்தவர், முடியோடு அடியினைக்காண்போம் என்று தருக்குற்று எழுந்த, பிரம னொடு திருமாலின் கருத்தழியும்படி அனல்வடிவுகொண்டு நின்று, பின் நகைத்திட்டருளிய சடைமுடி நம்பர்.

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையி னுற்றம்
மெய்யைப் போர்த்துழல் வாரு முரைப்பன மெய்யென
விரும்பேல்
செய்யில் வாளைக ளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்
மைகொள் கண்டத்தெம் பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே.

*10.* **வாளைமீன்களோடு கயல்மீன்கள் குதிகொள்கின்ற வயல்வளஞ் செறிந்தது புகலூர்; அங்கு வர்த்தமானீச்சரத்து உறையும், சிவபெருமான் நீலகண்டன். (வழிபடும் அன்பரீர்) கையில் வாங்கி உண்டு திரிபவர், துவராடையர், உடலைபோர்த்தவராகித் திரிவார், ஆய, சமணர்களோடு, தேரர்கள் உரைத்திடுகின்ற பொய்களை மெய்யென விரும்பாதீர்கள்.**

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற்புக லூரில்
மங்குன் மாமதி தவழும் வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான சம்பந்தன் றண்டமிழ் பத்தும்
எங்கு மேத்தவல் லார்க ளெய்துவ ரிமையவ ருலகே. ||

*11.* **நீர்வளம் பொழில்வளஞ்செறிந்து, மதிதவழ எழில்திகழும், திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்துப் பெருமானை, பொருந்திய சீர் திகழ், ஞானசம்பந்தன் போற்றியருளிய, தமிழாலாய பாடல்கள், இப்பத்தும் கொண்டு, எங்கும் ஏத்திட வல்லவர், இமையவர், உலகினில், இன்புறுவர்.**

**திருச்சிற்றம்பலம்.**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருப்பதிகங்கள்

### பொது

பண் - பியந்தைக்காந்தாரம்

இராகம் – நவரோஸ்] [தாளம் – திரிபுடை

திருச்சிற்றம்பலம்

சிவனெனுமோசையல்ல தறையோவுலகிற்
றிருநின்றசெம்மை யுளதே
அவனுமொரையமுண்ணி யதளாடையாவ
ததன்மேலொராட லரவம்
கவணளவுள்ளவுண்கு கரிகாடுகோயில்
கலனுவதோடு கருதில்
அவனதுபெற்றிகண்டும் அவனீர்மைகண்டும்
அகநேர்வர்தேவ ரவரே. 1

1. உயிர்கட்கு முத்திதரும் செம்பொருள் சிவம், சிவம் என்னும் ஓசையல்லாது உலகில் வேறு யாதுளது? (எதுவும் இல்லை) அச்சிவனுக்கு, உணவு பிச்சை, பாத்திரம் மண்டைஓடு, ஆடை புலித்தோல், கோயில் சுடுகாடு, அத்தகைய அவனது பெற்றிகண்டும், தன்மை கண்டும், அகம்நேர்வர் தேவர்கள். என்னே: அறியாமை.

விரிகதிர்ஞாயிறல்லர் மதியல்லர்வேத
விதியல்லர்விண்ணு நிலனும்
திரிதருவாயுவல்லர் செறுதீயுமல்லர்
தெளிநீருமல்லர் தெரியில்
அரிதருகண்ணியாளை யொருபாகமாக
அருள்காரணத்தில் வருவார்
எரியரவாரமார்பர் இமையாருமல்லர்
இமைப்பாருமல்லர் இவரே. 2

2. இறைவன்; காணப்படுகின்ற சந்திரசூரியர் வேதங்கள். வேதங்களின் விதிகள், விண்முதற் பூதங்கள். இமையா நாட்டத்தவர்களாய தேவர்கள், மாந்தர்கள் யாரும் அல்லாத ஒப்பற்ற, உணர்வதற்கரிய, உருவுடை முழுமுதற் பரம்பொருள் முதல்வன்; ஆயினும் உன்னி உணருமிடத்து அருள்புரிதல் காரணம்பற்றி உமையொருபாகனுக உருக்கொண்டு நின்றருள்வன்.

தேய்பொடிவெள்ளை பூசி யதன்மேலொர்திங்கள்
திலகம்பதித்த நுதலர்
காய்கதிர்வேலைநீல வொளிமாமிடற்றர்
கரிகாடர்காலொர் கழலர்
வேயுடனுடுதோளி யவள்விம்மவெய்ய
மழுவீசிவேழ வுரிபோர்த்
தேயிவராடுமாறு மிவள்காணுமாறும்
இதுதானிவர்க்கொ ரியல்பே. 3

3. உமையவள் விம்மிட யானையினை யுரித்துப் போர்த்தோன் நீலமிடற்ருேன் நீறணிந்தோன் திங்களைத் திலகம்போலும் காட்சியதாகத் திகழ்ந்திட அணிந்த

நுதலோன், ஒளிவண்ணன் ஆய சிவனார்; இறைவி காணுமாறு ஆடுகின்ற செயல்தான் இவரது இயல்பு போலும்.

வளர்பொறியாமைபுல்கி வளர்கோதைவைகி
வடிதோலுநூலும் வளரக்
கிளர்பொறி நாகமொன்றுமிளிர்கின்றமார்பர்
கிளர்காடுநாடு மகிழ்வர்
நளிர்பொறிமஞ்ஞையன்ன தளிர்போன்றசாயல்
அவடோன்றுவாய்மை பெருகிக்
குளிர்பொறிவண்டுபாடு குழலாளொருத்தி
யுளள்போல்குலாவி யுடனே. 4

4. மயிலன்ன தளிரன்ன சாயல், வண்டார்குழலாள் உமையவள் வாய்மை பெருகிக் குலாவி நிற்கக்கொண்ட அருட்டிருக் கோலத்தர், ஆமை தோலொடு நூல், நாகந் திகழ்கின்ற மார்பினர் சிவனார் காடோடு நாட்டினை இடமாக்கொண்டு மகிழ்ந்து நின்றருள்வர்.

உறைவதுகாடுபோலும் உரிதோலுடுப்பர்
விடையூர்வதோடு கலனா
இறையிவர்வாழும்வண்ண மிதுவேலுமீசர்
ஒருபாலிசைந்த தொருபால்
பிறைநுதல்பேதைமாத ருமையென்னுநங்கை
பிறழ்பாடநின்று பிணைவான்
அறைகழல்வண்டுபாடு மடிநீழலாணை
கடவாதமர ருலகே. 5

5. ஈசன் தனதுஒருபால் இசைந்தபேதைஉமைநங்கை பின்நின்றுபாட நின்று பிணேவோன், அவர் உறைவிடம் காடு, உடுப்பது தோலாடை, ஊர்வது விடை, பாத்திரம் ஓடு, வாழ்க்கையின் தன்மை இஃது, ஆயினும் வண்டு பாடுகின்ற சிலம்பணிந்த இவரது திருவடிநீழல் ஆணையினை அமரர் உலகமும் கடவாது.

கணிவளர்வேங்கையோடு கடிதிங்கள்கண்ணி
கழல்கால்சிலம்ப அழகார்
அணிகிளராரவெள்ளை தவழ்சுண்ணவண்ணம்
இயலாரொருவ ரிருவர்
மணிகிளர்மஞ்ஞையால மழையாடுசோலை
மலையான்மகட்கு மிறைவர்
அணிகிளரன்னவண்ணம் அவள்வண்ணவண்ணம்
அவர்வண்ணவண்ண மழலே. 6

6. சிவனுர் திங்கட்கண்ணியர் சுண்ணவெண்ணீற்றர் சிலம்புகின்ற கழலணிந்த திருவடியினர், ஒப்பற்ற ஒருவர் (பிரம விட்டுணுக்களாய இருவர்) மலையான் மகள் உமையாட்கு இறைவர், அவ்வுமையாள் அன்னம் ஒத்த வண்ணத்தாள் அவ்வுமையாரையுடைய அவர் அழல் வண்ணர்.

நகைவளர்கொன்றைதுன்று நகுவெண்டலையர்
நளிர்கங்கைதங்கு முடியர்
மிகைவளர்வேதகீத முறையோடும்வல்ல
கறைகொண்டமணிசெய் மிடறர்

முகைவளர்கோதைமாதர் முனிபாடுமாறும்
எரியாடுமாறு மிவர்கைப்
பகைவளர்நாகம்வீசி மதியங்குமாறு
மிதுபோலுமீச ரியல்பே. 7

7. உமை முன்னின்று பாடிட, எரியேந்தி ஆடுதல் ஈசர் இயல்பு. அவர் கொன்றையொடுதுன்று வெண்தலை மாலையர் முறையோடு வேதகீதத்தினை ஓதிடவல்லவர் கங்கைதங்கு முடியர் அழகிய மிடறர்

ஒளிவளர்கங்கைதங்கு மொளிமாலயன்றன்
உடல்வெந்துவீய சுடர்நீ
றணிகிளராரவெள்ளை தவழ்சுண்ணவண்ணர்
தமியாரொருவ ரிருவர்
களிகிளர்வேடமுண்டோர் கடமாவுரித்த
வுடைதோல்தொடுத்த கலனர்
அணிகிளரன்னதொல்லை யவள்பாகமாக
வெழில்வேத மோதுமவரே. 8

8. வெந்துபட்ட மால் அயன்றன் உடல்நீற்றினை அணிந்த வண்ணமேனியர் வேழஉரியர் சிவனர்: உமையவள் பாகமாக அழகிய வேதங்களை ஓதிடுகின்ற அவரே.

மலைமடமங்கையோடும் வடகங்கைநங்கை
மணவாளராகி மகிழ்வர்
தலைகலனாகவுண்டு தனியேதிரிந்து
தவவாணராகி முயல்வர்

விலையிலிசாந்தமென்று வெறிநீறுபூசி
விளையாடும்வேட விகிர்தர்
அலைகடல்வெள்ளமுற்றும் அலறக்கடைந்த
அழனஞ்சமுண்ட அவரே. 9

9. கடலிடை எழுந்த நஞ்சினை உண்ட சிவனார் விலை மதிப்பில்லாச் சாந்தமென்றுகருதித் திருநீற்றினை அணிந்த கோலத்தாய், விளையாடல்புரிவர் மலைமங்கை கங்கை நங்கை இவர்களொடு மணவாளக் கோலத்தராகி மகிழ்வர் திருவோட்டிலே கொண்ட பிச்சையுண்டு தனியே திரிந்து தவவாணராகி முயல்வர்.

புதுவிரிபொன்செயோலை யொருகாதொர்காது
சுரிசங்கநின்று புரள
விதிவிதிவேதகீத மொருபாடுமோத
மொருபாடுமெல்ல நகுமால்
மதுவிரிகொன்றைதுன்று சடைபாகமாதர்
குழல்பாகமாக வருவர்
இதுவிவர்வண்ணவண்ண மிவள்வண்ணவண்ணம்
எழில்வண்ணவண்ண மியல்பே. 10

10. இறைவர் உமையொருபாகந் திகழ்கின்ற எழிற் றிருமேனியர் பொன்செய் ஓலை, சங்கக்குழை இருகாதணி, வேதகீதம் ஓதல், புன்னகைபுரிதல் வாயின் இருபுறச் செயல்கள், கொன்றை துன்றுசடை, வண்டார்குழல் சடாமுடியின் திகழ்வு, இத்திகழ்வினைக் கொண்ட வண்ணம் இறைவரது வண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

பண் – பழம்பஞ்சுரம்

இராகம் – சங்கராபரணம்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

பருவரை யொன்றுசுற்றி யரவங்கைவிட்ட
வி்மையோரிரிந்து பயமாய்த்
திருநெடு மானிறத்தை யடுவான்விசும்பு
சுடுவானெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பிதிகாரமொன்றை
யருளாய்பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை யெரியாமலுண்ட
வவனண்ட ரண்டரரசே. 1

1. நஞ்சுண்டும் சாவாத ஒருவன்:- மத்தாக நாட்டியது, மகமேருமலை, அதனில் கயிருகச் சுற்றியது வாசுகி (பாம்பு) சுற்றியகயிற்றினைக்கொண்டு அக்கடலினைக்கடைந்தவர் தேவர்களோடு அசுரர்கள், அமுதத்திற்குப் பதிலாக உடன்கண்டது பாம்புகக்கிய விஷம், அவ்விடம் அங்கிருந்த திருமாலின் நிறத்தைத் தன்னிறமாக்கி விசும்புவரை மேலோங்கி எழுந்துசுட்டது, பாம்பினைக் கைவிட்டுத் தேவர்கள் பயந்தெழுந்து ஓடினர். பிதிகாரம் அருளவேண்டினர். அருள் உளங்கொண்ட இறைவர் அவ்விஷத்தைக் கையில் வரக்கொண்டனர். கருணையால்; உலகெலாம் (அவ்விஷத்தால்) எரிவுண்டு அழிவுருமல் உண்டனர். அவர் அண்டங்களின் தலைவர்க்கெல்லாம் தலைவர். எல்லா அண்டங்களையும் உடையவர்.

நிரவொலி வெள்ளமண்டி நெடுவண்டமூட
　　நிலநின்று தம்பமதுவப்
பரமொரு தெய்வமெய்த விதுவொப்பதில்லை
　　யிருபாலுநின்று பணியப்
பிரமனு மாலுமேலை முடியோடுபாத
　　மறியாமை நின்ற பெரியோன்
பரமுத லாயதேவர் சிவனாய மூர்த்தி
　　யவனாநமக்கொர் சரணே. 2

2. **தம்பமாய் நின்ற தனிப்பரமூர்த்தி:-** வெள்ளம் மண்டி அண்டங்களைமூடத் தாணுவாகிநின்ற இது ஒத்த பரதெய்வம் இல்லை என்று இருபாலும் யாவரும் நின்று பணிய நின்றபெரியோன். பிரமனும் மாலும் முன்னாள் அடி முடிகாண அறியாவண்ணம் நின்றபெரியோன், பரமுதல், சிவனாயமூர்த்தி, அவரே நமக்கெல்லாம் சரண்.

காலமு நாள்களூழி படையாமுன்
　　ஏகவுருவாகி மூவருருவில்
சாலவு மாகிமிக்க சமயங்களாறின்
　　உருவாகிநின்ற தழலோன்
ஞாலமு மேலைவிண்ணொ டுலகேழுமுண்டு
　　குறளாயொராலி னிலைமேல்
பாலனு மாயவற்கொர் பரமாயமூர்த்தி
　　யவனாநமக்கொர் சரணே. 3

3. **எல்லாமாய் நின்ற இறைவன்:-** காலம் நாள் ஊழி இவைகளின் தோற்றத்திற்குமுன் ஏக உருவினன், பின் ஐந்தொழிலைப்புரிகின்ற மூவர் உருவினன், சமயங்களின்

ஆறின் தலைவன். உலகேழொடு இவ்வுலகினையும் உண்டு ஆலிலையின்மேல் பள்ளிகொண்ட பாலனுக்குப் பரமாய மூர்த்தி, அவனே நமக்கோர் சரண்.

நீடுயர் விண்ணுமண்ணு நெடுவேலைகுன்றொ
டுலகேழுமெங்கு நலியச்
சூடிய கையராகி யிமையோர்கணங்க
டுதியோதிநின்று தொழலும்
ஓடிய தாரகன்ற னுடலம்பிளந்து
மொழியாதகோப மொழிய
ஆடிய மாநடத்தெ மனலாடிபாத
மவையாநமக்கொர் சரணே. 4

4. தாரகன்வதம்:- தாரகாசுரன் விண்ணுலகு மண்ணுலகு கடல் மலை ஏழுலகு எங்குஞ்சென்று துன்புறுத்தினன். துன்பந்தாங்காத தேவர்கள் சென்னியிற்சூடிய கையர்களாகித் துதித்து ஓதித்தொழுது நின்றனர். அது உகந்த சிவனர்; அத்தாரகனது உடலைப் பிளந்து நீங்காத கோபமுற்றனர். பின்பு அக்கோபம்நீங்க, ஆனந்த நடனம் ஆடினர். அவர் பாதங்களே நமக்கு ஒப்பற்ற சரண்.

நிலைவலி யின்றியெங்கு நிலனோடுவிண்ணு
நிதனஞ்செய்தோடு புரமூன்
றலைநலி வஞ்சியோடி யரியோடுதேவ
ரரணம்புகத்த னருளால்
கொலைநலி வாளிமூள வரவங்கைநாணு
மனல்பாயநீறு புரமா
மலைசிலை கையிலொல்க வளைவித்தவள்ள
லவனாநமக்கொர் சரணே. 5

5. திரிபுரமெரித்தது:- நிலை பெற்றிருத்தற்குரிய, வலிமையின்றி இப்பூவுலகத்தொடு விண்ணுலகம்வரை எங்கும் சென்று அழிவுசெய்வதாகி ஓடித்திரிந்தன திரிபுரங்கள். அத்திரிபுரங்களின் நலிவுகண்டு, அஞ்சியோடிய திருமாலொடு தேவர்கள் அடைக்கலம் புகுந்தனர். அதுகண்டு அருளால் அனல்பாய்ந்து நீறெழும்படி மலைவில்லினை வளைவித்த வள்ளல் சிவன்; அவனே நமக்குச் சரண்.

நீலநன் மேனிசெங்கண் வளைவெள்ளெயிற்ற
னெரிகேச னேடிவருநாள்
காலைநன் மாலைகொண்டு வழிபாடுசெய்யு
மளவின்கண்வந்து குறுகிப்
பாலனை யோடவோடப் பயமெய்துவித்த
வுயிர்வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலுமண்டர்
தொழுதோது சூடுகழலே 6

6. காலனை உதைத்தது:- மாலைகொண்டு வழிபாடு செய்தனர், மார்க்கண்டேயர்; அக்காலையில் நீலமேனியன் சிவந்தகண்ணன் வளைந்தபல்லன், தீப்போலும் குஞ்சியினன் இயமன் தேடி ஓடிவந்தனன். பாலராகிய அவரை ஓட ஓட வெருட்டிப் பயமுறச்செய்தனன் உயிரைக் கவர்கின்ற பாசக்கயிற்றை வீசினன். வீசியகாலனை வீடுவித்திட உதைத்தது சிவனரது திருவடி, அண்டர்கள் ஓதிப்போற்றுவதும், சூடி அணிந்து கொள்ளுவதும் அத்திருவடியிணைகளே.

உயர்தவ மிக்கதக்க னுயர்வேள்விதன்னி
லவியுண்ணவந்த விமையோர்
பயமுறு மெச்சனங்கி மதியோனுமுற்ற
படிகண்டுநின்று பயமாய்
அயனெடு மாலுமெங்கே ளறியாமையாதி
கமியென்றிறைஞ்சி யகலச்
சயமுறு தன்மைகண்ட தழல்வண்ணனெந்தை
கழல்கண்டுகொள்கை கடனே. 7

7. தக்கன் வேள்வியழிந்தது.- தவத்தில் உயர்ந்தோன் தக்கன். அவனது வேள்வி மிக உயர்தரத்தது. அவிசும் மிக உயர்ந்தது, மாலொடு அயன் எச்சன், அக்கினி, சந்திரன் முதலாய தேவர்கள் அதுபெற அங்குவந்து குழுமினர். தன்னை எண்ணாது வேள்விபுரி அத்தக்கன் செயல்கண்டு, அகோரவீரபத்திரராகி அங்குற்றனர் சிவனார்; அதுகண்டு பயந்தொடுங்கிய சூரியன், சந்திரன், அக்கினி முதலியோர்கட்கு அங்கு நேர்ந்த துன்பநிலைகண்டு, பயந்தொடுங்கிய திருமாலொடு பிரமன், எங்கள் அறியாமையால், இங்குற்றோம் என்று இறைஞ்சி அகன்றனர். அவ்வகை வெற்றிகண்ட அழல்வண்ணன் எந்தை; அவனது கழல்களைக்கண்டுகொள்ளுதலே கடமையாகும்.

நலமலி மங்கைநங்கை விளையாடியோடு
நயனத்தலங்கள் கரமா
உலகினை யேழுமுற்று மிருண்மூடமூட
விருளோடநெற்றி யொருகண்

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
No. 109650
Q23;38-2192.TP
N56

அலர்தர வஞ்சிமற்றை நயனங்கைவிட்டு
மடவாளிறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதிபோல வலர்வித்தமுக்க
ணவனுநமக்கொர் சரணே. 8

8. உமையவள் கண்களை மூடியது:- உமைநங்கை விளையாடி ஓடினள், இறைவனது கண்களைப்பொத்தினள், உலகேழும் இருளுண்டது. இருள் ஓட நெற்றிக் கண்ணைத் திறந்தனர் இறைவர், இருளைக்கண்டஞ்சிய உமையம்மை பொத்திய கரங்களை அகற்றினள், கூப்பி இறைஞ்சினள். மதிபோலும் அவரது முகத்தினை மலர்வித்தனர். முக்கண்ணர் அவரே நமக்குச் சரண்.

கழைபடு காடுதென்றல் குயில்கூவவஞ்சு
கணையோனணைந்து புகலும்
மழைவடி வண்ணனெண்ணி மகவோனைவிட்ட
மலரானதொட்ட மதனன்
எழில்பொடி வெந்துவீழ விமையோர்கணங்க
ளெரியென்றிறைஞ்சி யகலத்
தழல்படு நெற்றியொற்றை நயனஞ்சிவந்த
தழல்வண்ணனெந்தை சரணே. 9

9. தவக்கோலம்கொண்டு மதனை எரித்தது:- தவச்செயல்நீங்கி மணச்செயல் நிகழ எண்ணினர் திருமால், மலர்ப்பாணம் தொடுத்திட மன்மதனை விடுத்தனர், அவர் ஆணைவழிச் சென்ற அஞ்சுகணையோன் அங்கு அணைந்து புக்கனன். அங்குக் குழுமியிருந்த தேவரினங்கள் எல்லாம் தீயென்று இறைஞ்சி அகன்றிட அவனது அழகெல்லாம் பொடியாகி வெந்து வீழ்ந்திட நெற்றி

ஒற்றைக் கண்ணினைத் திறந்தனர் தழல்வண்ணர். அத் தழல்வண்ணன் எந்தையே சரண்.

தடமல ராயிரங்கள் குறைவொன் றதாக
நிறைவென்று தன்க ணதனால்
உடன்வழி பாடுசெய்த திருமாலையெந்தை
பெருமா னுகந்து மிகவும்
சுடரடி யான்முயன்று சுழல்வித் தரக்க
னிதயம்பிளந்த கொடுமை
அடல்வலி யாழியாழி யவனுக்களித்த
வவனாநமக்கொர் சரணே. 10

10. திருமாலுக்குச் சக்கிரம் அருளியது:- தனது ஒளி விடுகின்ற திருவடியால் சக்கிரத்தைத் தோற்றுவித்து, சலந்தரன் இதயத்தைப்பிளந்தோன், பிளந்தசக்கிரத்தினை வேண்டிக் குறைந்த மலர்க்காகக் கண்ணினைப் பிடுங்கிச் சாத்தி வழிபாடு செய்தனர் திருமால். வழிபாடு உகந்து சக்கிரத்தினை அளித்தனர் சிவனார். அச்சிவனார் அடியிணைகளே நமக்கு ஓர் சரண்.

கடுகிய தேர்செலாது கயிலாயமீது
கருதேலுன்வீர மொழிநீ
முடுகுவ தன்றுதன்ம மெனநின்றுபாகன்
மொழிவானைநன்று முனியா
விடுவிடு வென்றுசென்று விரைவுற்றரக்கன்
வரையுற்றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்றுவீழ விரலுற்றபாத
நினைவுற்றதென்றன் மனனே. 11

*11.* இராவணனைவிரலால் நெறித்தது:- கயிலாயத்தின்மீது தேர்செல்லாது. அங்குச் செலுத்துதலாகிய வீரத்தை நீ ஒழி. அது தருமமல்ல, என்று சொல்லிய தேர்ப்பாகனைக் கோபித்தனன். இராவணன் தேரைவிடு, என்று சொல்லி விடுவிடென்று சென்று விரைவோடும், அக்கயிலையைப் பெயர்த்தனன். பெயர்த்தஞான்று முடிகளோடு தோள்கள் நெடுநெடு என்று இற்று விழும்படி திருவடித் திருவிரலை ஊன்றினர் இறைவர். அத்திருவடிகளையே நினைவுற்றது எனது மனம்.

திருச்சிற்றம்பலம்

## பாவநாசப்பதிகம்

பழம்பதி, முதலாய தலங்களில், இருந்துறைந்தருளிடும் பவளம், பசும்பொன், கனி, சுடர், விளக்கு, நிதி, ஞானம், புகழ், திருநீறு, திமிர்ந்த தோளினன் சிவபெருமானை உள்ளத்தேவைத்து தோள் குளிரத்தொழுது, மறவாது அன்பால் அணைத்து அந்நீர்வெள்ளத்தால் ஆட்டி, இம்மாலைகொண்டு, அடியிணைகளிற்சாத்தி, வழிபடுவார்களது பாவம் நாசமுறும் என்றருளுகின்றது.

பண் — பழம்பஞ்சுரம்

இராகம் — சங்கராபரணம்] தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

பற்றற்றூர்சேர் பழம்பதியைப்
பாசூர்நிலாய பவளத்தைச்
சிற்றம்பலத்தெந் திகழ்கனியைத்
தீண்டற்கரிய திருவுருவை

வெற்றியூரில் விரிசுடரை
விமலர்கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றியூரெ முத்தமனை
யுள்ளத்துள்ளே வைத்தேனே, 1

1. பழம்பதி (புனவாயில்) பாசூர், தில்லையம்பலம், வெற்றியூர், கடல் சூழ்ந்த ஒற்றியூர் ஆகிய, தலங்களில் பவளம், கனி, சுடரொத்து, நின்றருளும் உத்தமனை என் உள்ளத்தில் வைத்தேன்.

ஆனைக்காவி லணங்கினை
யாரூர்நிலாய வம்மானைக்
கானப்பேரூர்க் கட்டியைக்
கானூர்முளைத்த கரும்பினை
வானப்பேரார் வந்தேத்தும்
வாய்மூர்வாழும் வலம்புரியை
மானக்கயிலை மழகளிற்றை
மதியைச்சுடரை மறவேனே. 2

2. ஆனைக்கா, ஆரூர், கானப்பேர், கானூர் வாய்மூர், ஆய தலங்களை, இடங்கொண்டு உறைந்திருந் தருளும் கயிலைக்களிற்றினை மறவேன்.

மதியங்கண்ணி ஞாயிற்றை
மயக்கந்தீர்க்கு மருந்தினை
அதிகைமூதூ ரரசினை
யையாறமர்ந்த வையனை

விதியைப்புகழை வானோர்கள்
வேண்டித்தேடும் விளக்கினை
நெதியைஞானக் கொழுந்தினை
நினைந்தேற்குள்ள நிறைந்ததே. 3

3. பிறைக்கண்ணியணிந்தோன். ஞாயிறுபோன் மயக்கெலாம் தீர்க்கும் மருந்து, அதிகையிலும், ஐயாற்றிலும், அமர்ந்த அரசன், தேவர்களும் வேண்டித் தேடும் விளக்கு, விதி, புகழ், நிதி, ஞானம், அதன் கொழுந்து, ஆய எம்பெருமானை நினைந்த எனது உள்ளம் நிறைவுற்றது.

புறம்பயத்தெம் முத்தினைப்
புகலூரிலங்கு பொன்னினை
உறந்தையோங்கு சிராப்பள்ளி
யுலகம்விளங்கு ஞாயிற்றைக்
கறங்குமருவிக் கழுக்குன்றிற்
காண்பார்காணுங் கண்ணுளை
அறஞ்சூழதிகை வீரட்டத்
தரிமானேற்றை யடைந்தேனே. 4

4. புறம்பயம், புகலூர், உறையூர், சிராப்பள்ளி, கழுக்குன்று, அறந்திகழ் அதிகை வீரட்டம் ஆயதலங்களில் இருந்து அருள்வோன் உலகத்தைத் திகழ்விக்கின்ற சூரியன் காண்பார்களது, கண்ணாக விளங்குகின்ற எம்பெருமான் அவனை அடைந்தேன்.

கோலக்காவிற் குருமணியைக்
குடமூக்குறையும் விடமுண்ணியை
ஆலங்காட்டி லந்தேனை
யமரர்சென்னி யாய்மலரைப்
பாலிற்றிகழும் பைங்கனியைப்
பராய்த்துறையெம் பசும்பொன்னைச்
சூலத்தானைத் துணையிலியைத்
தோளைக்குளிரத் தொழுதேனே. 5

5. கோலக்கா, கும்பகோணம், ஆலங்காடு, பராய்த்துறை, ஆய தலங்களில் குருமணி விடம்உண்ணி, அம் தேன், பால், பாலொடுகனி, பசும்பொன் ஆகித் திகழ்கின்ற, ஆலந்தாங்கிய எம் பரமனது தோள்களைக் குளிரத் தொழுதேன்.

மருகலுறைமாணிக்கத்தை
வலஞ்சுழியின் மாலையைக்
கருகாவூரிற் கற்பகத்தைக்
காண்டற்கரிய கதிரொளியைப்
பெருவேளூரெம் பிறப்பிலியைப்
பேணுவார்கள் பிரிவரிய
திருவாஞ்சியத்தெஞ் செல்வனைச்
சிந்தையுள்ளே வைத்தேனே. 6

6. மருகல், வலஞ்சுழி, கருகாவூர், பெருவேளூர், திருவாஞ்சியம், ஆய தலங்களில் உறைந்தருளும், கற்பகம், கதிரொளி, மாணிக்கம், பிறப்பிலி, பிரிவரியசெல்வன், ஆய எம்பரமனைச் சிந்தையுள்ளே வைத்தேன்.

எழிலாரிராச சிங்கத்தை
யிராமேச்சுரத்தெ மெழிலேற்றைக்
குழலார்கோதை வரைமார்பிற்
குற்றாலத்தெங் கூத்தனை
நிலமார்சோலை நெடுங்களத்து
நிலாயநித்த மணாளனை
அழலார்வண்ணத் தம்மானை
யன்பிலணைத்து வைத்தேனே. 7

7. இராமேச்சுரம், குற்றாலம், நெடுங்களம், ஆய தலங்களில் நிலாவி இருந்தருளும் அழல் வண்ணத்தம் மான் மணாளனை அன்பிற் பொருந்திட, அணைத்து வைத்தேன்.

மாலைத்தோன்றும் வளர்மதியை
மறைக்காட்டுறையு மணாளனை
ஆலைக்கரும்பி னின்சாற்றை
யண்ணாமலையெம் மண்ணலைச்
சோலைத்துருத்தி நகர்மேய
சுடரிற்றிகழுந் துளக்கிலியை
மேலைவானோர் பெருமானை
விருப்பால்விழுங்கி யிட்டேனே. 8

8. வளர்மதி, மறைக்காட்டுறையும் மணாளன் கரும்பின்சாறு அண்ணாமலையுறை அண்ணல் துருத்திமேய சுடர் வானோர் பெருமான் ஆய எம்பெருமானை விருப் பினாலே விழுங்கினேன்.

சோற்றுத்துறையெஞ் சோதியைத்
துருத்திமேய தூமணியை
ஆற்றிற்பழனத்தம்மானை
யாலவாயெம் மருமணியை
நீற்றிற்பொலிந்த நிமிர்திண்டோ
ணெய்த்தானத்தெங் நிலாச்சுடரைத்
தோற்றக்கடலை யடலேற்றைத்
தோளைக்குளிரத் தொழுதேனே. 9

9. சோற்றுத்துறை, துருத்தி, பழனம், ஆலவாய் நெய்த்தானம், ஆயதலங்களில் இருந்தருளும், சோதி, மணி, சுடர், ஒத்து, திருநீறு திமிர்ந்து திகழ்கின்றதிண்டோளன் பெருமானைத்தோளைக் குளிரத்தொழுதேன்.

புத்தூருறையும் புனிதனைப்
பூவணத்தெம் போரேற்றை
வித்தாய்மிழலை முளைத்தானை
வேள்விக்குடியெம் வேதியனைப்
பொய்த்தார்புரமூன் றெரித்தானைப்
பொதியின்மேய புராணனை
வைத்தேனென்றன் மனத்துள்ளே
மாத்தூர்மேய மருநதையே. 10

10. திருப்புத்தூர், பூவணம் திருவேள்விக்குடி, திருவீழிமிழலை, பொதியமலை, மாத்தூர், ஆய இடங்களில் வித்தாய்முளைத்து இருந்தருளும் வேதியன் புரமூன்றெரித்த புனிதன், புராணன் மருந்து ஆயபெருமானை, என்றன் மனத்துள்ளே வைத்தேன்.

முந்தித்தானே மூளைத்தானை
மூரிவெள்ளே றூர்ந்தானை
அந்திச்செவ்வான் படியானை
யரக்கனுற்ற லழித்தானைச்
சிந்தைவெள்ளப் புனலாட்டிச்
செஞ்சொன்மாலை யடிச்சேர்த்தி
எந்தைபெம்மா னென்னெம்மான்
என்பார்பாவ நாசமே. 11

11. முன்னே தோன்றி மூளைத்தோன். இடப ஊர்தியன் அந்திவானமொத்த நிறத்தோன், அரக்கன் ஆற்றல் அழித்தோன், சிவனை, சிந்தையிற் பெருகுகின்ற அன்பு நீர் வெள்ளப்பெருக்கினுல் ஆட்டி இச்செம்மைச் சொல் மாலையினை, திருவடிகளிற் சேர்த்தி எந்தை பெம்மான், என் எம்மான் என்பார்களது பாவம், நாச மாகும்.

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை பண் – கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்.

தொண்டனேன் பட்டதென்னே
தூயகா விரியின்நன்னீர்
கொண்டிருக் கோதியாட்டிக்
குங்குமக் குழம்புசாத்தி

இண்டைகொண் டேறநோக்கி
ஈசனை யெம்பிரானைக்
கண்டனைக் கண்டிராதே
காலத்தைக் கழித்தவாறே. 1

*1.* காவிரி நீர்கொண்டு, இருக்குஓதி, மஞ்சனமாட்டி, குங்குமக் குழம்போடு இண்டைசாத்தி வழிபட்டு வழிபடுவதாய அச்செயலிற்றிகழ்கின்ற ஈசனது அழகினைக் கண்டிராது தொண்டனேன், காலம் பலகழித்தேனே? இனி செய்வது என்னை!

பின்னிலேன் முன்னிலேன்நான்
பிறப்பறுத் தருள்செய்வானே
என்னிலேன் நாயினேன்நான்
இளங்கதிர்ப் பயலைத்திங்கள்
சின்னிலா எறிக்குஞ்சென்னிச்
சிவபுரத் தமரரேறே
நின்னலால் களைகண் ஆரே
நீறுசே ரகலத்தானே. 2

*2.* இளந்திங்கள் திகழ்கின்ற சென்னியுடைச் சிவபுரனே, நீறணிந்த மார்பினனே, நின்னையல்லாற்களைகண் யாருளர்.

கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப்போக்கித்
தெள்ளியே னாகிநின்று
தேடினேன் நாடிக்கண்டேன்

உள்குவா ருள்கிற்றெல்லாம்
உடனிருந் தறிதிஎன் று
வெள்கினேன் வெள்கினானும்
விலாவிறச் சிரித்திட்டேனே. 3

3. கள்ளமாய்த் தொண்டுசெய்தேன் கள்ளனேன்: காலம்பலகழிந்தேன் பின்தெளிவுடையனாகித் தேடினேன். நாடினேன் நீ உடனிருந்தே எவற்றையும் அறிகின்றாய் என்ற உண்மையினைக் கண்டேன் வெள்கினேன். விலா இற்றிடச் சிரித்திட்டேன்.

உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால்
எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை
கழலடி காணலாமே. 4

4. உடலெனும் மனையகத்துள், ஞானமாம் தீயினால் விளக்கினையேற்றி. இருந்துநோக்கிடின், கடம்பன், தாதை தன் கழலடிகாணலாம்.

வஞ்சகப்பெண் ணரங்குகோயில்
வாளெயிற் றரவந்துஞ்சா
வஞ்சப்பெண் இருந்தசூழல்
வான்தவழ் மதியந்தோயும்

வஞ்சப்பெண் வாழ்க்கையாளன்
வாழ்வினை வாழலுற்று
வஞ்சப்பெண் ணுறக்கமானேன்
வஞ்சனேன் என்செய்கேனே. 5

5. வஞ்சப்பெண் வாழ்க்கையன் இறைவன்; வாழ்க்கைத்துணைவிகள், உடலில் உறை உமையும், சடையில் உறை, கங்கையும், ஆய இருவர், உடலில் உறை உமையாள் அறியாதபடி சடையில் உறைவாளை இறைவனும். உடலில் உறைவாள் அறியாவண்ணம் சடையில் உறைகங்கையாள் இறைவனையும், ஒருவர்பால், ஒருவர் நினைவுகொண்டு, தூங்காமல் தூங்குகின்றனர். அக்கங்கையாளொடு அச்சடையில் உறைபாம்பும் உடனுறைகின்ற திங்களைவிழுங்கிட, தூங்காமல், தூங்குகின்றது இவ்வகை வஞ்சப்பெண் வாழ்க்கையாளனாய, தலைவனின் (இறைவனின்) வாழ்வினை வாழலுற்று, கள்ளக்காரிகை மடந்தைபோல் உள்ளத்தெழுகின்ற நினைவுமீதூர உறங்காது, உறங்குகின்றேன். (உறக்கம் விழித்தும் விழியாது மா, யமர்ந்திருக்கின்ற யோகத்துயில்.)

உள்குவார் உள்ளத்தானை
உணர்வெனும் பெருமையானை
உள்கினேன் நானுங்காண்பான்
உருகினேன் ஊறியூறி
எள்கினேன் எந்தைபெம்மான்
இருதலை மின்னுகின்ற
கொள்ளிமேல் எறும்பென்உள்ளம்
எங்ஙனங் கூடுமாறே. 6

6. உள்கி நினைவார்களது உள்ளத்து உணர்வாய பெருமையனைக்காண்பான் உருகினேன், உள்ளம் இருதலைக் கொள்ளி எறும்பொத்தது உள்குதலாய செயல் எவ்வாறு கைகூடும்.

மோத்தையைக் கண்டகாக்கை
போலவல்வினைகள் மொய்த்துன்
வார்த்தையைப் பேசவொட்டா
மயக்கநான் மயங்குகின்றேன்
சீத்தையைச் சிதம்புதன்னைச்
செடிகொள்நோய் வடிவொன்றில்லா
ஊத்தையைக் கழிக்கும்வண்ணம்
உணர்வுதா உலகமூர்த்தி. 7

7. உலகமூர்த்தி அழகில்லாத நோயுடைப் பிறவியை நீக்கிவிடு. உபாயமாக நின்வார்த்தையைப்பேசிட உணர்வு தந்தருள், வினைகள் இடையூறுகி மயக்குகின்றன. வினைகட்கு உவமை மோத்தை (சோத்துருண்டை)யைக் கண்ட காக்கை.

அங்கத்தை மண்ணுக்காக்கி
ஆர்வத்தை உனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப்
பாவித்தேன் பரமாநின்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா
சாதல்நாள் நாயேன்உன்னை
எங்குற்றாய் என்றபோதால்
இங்குற்றேன் என்கண்டாயே. 8

8. பரமா ஆர்வத்தை உனக்கேதந்து பாவனை புரிந்தேன், இறுதியில் எங்குற்ருய் என்றபோது இங்குற்றேன் என்றருள்வாயாக.

வெள்ளநீர் சடையனர்தாம்
வினவுவார் போலவந்தென்
உள்ளமே புகுந்துநின்ருர்க்
குறங்குநான் புடைகள்போந்து
கள்ளரோ புகுந்தீர்என்னக்
கலந்துதான் நோக்கிநக்கு
வெள்ளரோ மென்றுநின்ருர்
விளங்கிளம் பிறையனரே. 9

9. பிறையணிந்தசிவனர்; கங்கையணிசெஞ்சடையர், என் உள்ளத்தே புகுந்தனர் உறங்கிக்கொண்டிருந்த யான் கள்ளரோ புகுந்தீர் என்றேன், என்னெடுங் கலந்து நோக்கி வெள்ளரோமென்று சிரித்தனர்.

பெருவிரல் இறைதானூன்றப்
பிறையெயி றிலங்கஅங்காந்
தருவரை அனையதோளான்
அரக்கனன் றலறிவீழ்ந்தான்
இருவரும் ஒருவனய
உருவமங் குடையவள்ளல்
திருவடி சுமந்துகொண்டு
காண்கநான் திரியுமாறே. 10

10. இராவணன் மலையனைய தோளான் கயிலையைப் பெயர்த்தனன், அங்குறை இறைவர், திருவடிப் பெரு

விரலைச் சிறிது ஊன்றினர் பிறையொத்து வளைந்த பற்கள் வெளித்தோன்ற ஆ வென வாய்திறந்து, அலறியவனுகி வீழ்ந்தான். நான், இருவரும் ஒருவராய (அம்மையும் அப்பனுமாய) உருவங்கொண்டு அங்கு இருந்திடும்வள்ளல் தன் திருவடியிணைகளைச் சுமந்து கொண்டு திரிகின்றேன் காண்பீர்களாக

திருச்சிற்றம்பலம்

தனித்திருநேரிசை – பண் கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

மருளவா மனத்தனுகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா வறுக்குமெந்தை யிணையடி நீழலென்னும்
அருளவாப் பெறுதலின்றி யஞ்சினா னலமந்தேற்குப்
பொருளவாத் தந்தவாறே போதுபோய்ப் புலர்ந்ததன்றே.

1. அறிவிலேன், மல விருள்நீக்கி, அருள்தரும், எந்தை இணையடி நிழல் பெறுதலில், ஆசையின்றி அஞ்சி அவ்வழித் துன்புற்றேன். பொருளாசை உற்றவழியே. பொழுதும் போய்ப்புலர்ந்தது.

மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் [வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனு [நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையு ணிற்பராகிற் சிவகதி விளையுமன்றே. 2

2. உடம்பு - வயல், உண்மை - உழவு, விருபபு - விதை, பொறுமை - தண்ணீர், தகவு - (எண்குணமாய தகுதி) வேலி, நோக்கி - (உள்நோக்கி) கண்காணித்து; பொய்மை - களை, பயிர் - சிவகதி. இது சிவகதி விளைவினை உணர்த்திற்று.

எம்பிரா னென்றதேகொண் டென்னுளே புகுந்துநின் றிங்
கெம்பிரா ளுட்டவாடி யென்னுளே யுழிதர்வேனை
எம்பிரானென்னைப்பின்னைத் தன்னுளே கரக்குமென்றால்
எம்பிரா னென்னினல்லா லென்செய்கே னேழையேனே.

3. எம்பிரானை, உள்ளத்தே கொண்டேன், அவ் எம்பிரான், என் உள்ளத்தே புகுந்து, என்னை ஆட்டிட அவ்வழி என்னுள்ளே ஆடித்திரிகின்றேன். திரிகின்ற என்னை அவ் எம்பிரான் பின் தன்னுள்ளே கரந்திடும் எனின், எம்பிரான் என்று சொல்வதல்லால் ஏழையேன் என்செய இயலும். தான் உட்கொண்ட சிவபரம்பொருள் தன்னை உட்கொண்டது என்பது உணர்த்திற்று.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே. 4

4. காயம் - உடல். வாய்மை - உண்மை. நேயம் - நேசம். அவி - நைவேத்தியம். இச்செய்யுள் அகப்பூசனை யினை உணர்த்திற்று.

வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டி ற்பூட்டி
அஞ்சலென் றாண்டுகொண்டா யதுவுநின்பெருமையன்றே
நெஞ்சகங் கனியமாட்டே னின்னையுள் வைக்கமாட்டேன்
நஞ்சிடங் கொண்டகண்டா வென்னெனை நன்மைதானே. 5

5. வஞ்சனாய என்னை ஏனைய வழிகளை நீக்கி, தொண்டினில் பொருந்திட ஆக்கினை, அஞ்சலென்று ஆண்டனை அது நின்பெருமை. அத்தகைய நின்னை நினைந்து கனிந்திடேன். நீலகண்டா.

நாயினுங் கடைப்பட்டேனை நன்னெறி காட்டியாண்டாய்
ஆயிர மரவமார்த்த வமுதனே யமுதமொத்து
நீயுமென் னெஞ்சினுள்ளே நிலாவினாய் நிலாவிநிற்க
நோயவை சாருமாகி னோக்கிநீ யருள்செய்வாயே. 6

6. நாயினும் கடையேனை, ஆண்டனை, நெஞ்சினுள் புகுந்து அமுதம் ஒத்து, நிலாவினை, நோய் சாருமாகில், நீ அதுநோக்கி, (சாராவண்ணம்) அருள்வாயாக. நோய் - பிறப்பு, இறப்பு.

விள்ளத்தா னொன்றுமாட்டேன் விருப்பெனும்
[வேட்கையாலே
வள்ளத்தேன் போலநுன்னை வாய்மடுத் துண்டிடாமே
உள்ளத்தே நிற்றியேனு முயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனங் காணுமாறே. 7

7. பெருமானே, வேட்கை மிக்குற்றேன். கிண்ணத்தின் நிறைந்த தேனினைப் பருகுவதுபோல உன்னைப் பருகிடு

தற்கு, இலாதவனுயினேன். உள்ளத்தே நினருய் உயிர்ப்புளே வருகின்ருய். ஆயினும், காணுவகை நின்றனே. அம்மா! அத்தகைய நின்னே எங்ஙனம் காண்பது.

ஆசைவன் பாசமெய்தி யங்குற்றே னிங்குற்றேனுய்
ஊசலாட் டுண்டுவாளா வுழந்துநா னுழிதராமே
தேசனே தேசமூர்த்தி திருமறைக் காடுமேய
ஈசனே யுன்றன்பாத மேத்துமா றருளெம்மானே. 8

8. இவ்வுலகிடை ஆசையும், பாசமும் உற்றேனுய் அங்கும் இங்குமாய், (உன்னிடத்தும், உலகிடையேயும்) ஊஞ்சல்போல் ஆட்டுண்டு வீணுக அலேந்திடாமல் ஈசனே உன் பாதங்களேயே ஏத்துமாறு அருள்வாயாக.

நிறைவிலே னேசமில்லே னினேவிலேன் வினேயின்பாச
மறைவிலே புறப்பட்டேறும் வகையெனக் [கருளெனெம்மான்
சிறையிலேன் செய்வதென்னே திருவடி பரவியேத்தக்
குறைவிலேன்குற்றந்தீராய் கொன்றைசேர்சடையினுனே.

9. கொன்றைசேர் சடையினுனே, பாசம் நீங்கிடும் வகையெனக்கருளி, திருவடி பரவியேத்திட அருள்வாயாக.

நடுவிலாக் காலன்வந்து நணுகும்போ தறியவொண்ணு
அடுவன வஞ்சுபூத மவைதமக் காற்றலாகேன்
படுவன பலவுங்குற்றம் பாங்கிலா மனிதர்வாழ்க்கை
கெடுவதிப் பிறவிசீசீ இளரொளிச் சடையினீரே. 10

10, இப்பிறவியில் பாங்கிலா மனிதர் வாழ்க்கையிற் பொருந்துவன பலவும் குற்றமே. ஆதலின், ஒளிவண்ணச் சடைப்பெருமானே! இப்பிறவியினை வேண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை – பண் கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

கடும்பக னட்டமாடிக் கையிலோர் கபாலமேந்தி
இடும்பலிக் கில்லந்தோறு முழிதரு மிறைவனீரே
நெடும்பொறை மலையர்பாவை நேரிழை நெறிமென்கூந்தற்
கொடுங்குழை புகுந்தவன்றுங் கோவண மரையதேயோ. 1

1. கபாலங் கையில்கொண்டு, பலி ஏற்றுத்திரிகின்ற இறைவா; மலையான் மகள், உம்மிடத்தில் குடிபுகுந்த அன்றும் கோவணந்தரித்த அரையராகியோ இருந்தீர்!

கோவண முடுத்தவாறுங் கோளர வசைத்தவாறும்
தீவணச் சாம்பர்பூசித் திருவுரு விருந்தவாறும்
பூவணக் கிழவனாரைப் புலியுரி யரையனாரை
ஏவணச் சிலையினாரை யார்வரே யெழுதுவாரே. 2

2. மலையினை, வில்லாக்கொண்டவர், பூவணத்துறை புனிதர். அப்புனிதர் கோவணம்உடுத்தது, பாம்பினைத் தரித்தது, சாம்பலைப் பூசியது தீப்போலுங் திருவுருக் கொண்டது. ஆய தன்மைகளை யாரே எழுதவல்லார்.

விளக்கினர் பெற்றவின்ப மெழுக்கிஞற் பதிற்றியாகும்
துளக்கிநன் மலர்தொடுத்தாற் றாயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ஞ்ஞெறிஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னூர்க் கடிகடா மருளுமாறே. 3

3. திருஅலகிடல், திருமெழுக்கிடல் மலர்தொடுத்தல், பாடுதல், ஆய பணியாளர்கட்கு, அப்பணியினை என்றருள் கின்ற இறைவர்; இன்பமும், ஞானமும், மேலுலகெய்த லும், ஆய பயன்களை அருளிடுவர்.

சந்திரற் சடையில்வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர்பெம்மா னனல்வெள் ளூர்தியான்றன்
மந்திர நமச்சிவாய வாகநீ றணியப்பெற்றால்
வெந்தறும் வினையும்நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே.

4. இறைவரது ஐந்தெழுத்தாய மந்திரங்கொண்டு திருநீறு அணிந்திடப் பெறுவார்களது வினையும் நோயும் அனலிற் பொருந்திய விறகுபோல அழிந்தொழியும்.

புள்ளுவ ரைவர்கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்
முள்ளுடை யவர்கடம்மை முக்கணன் பாதநீழல்
உள்ளிடை மறைந்துநின் றங் குணர்வினு லெய்யலாமே. 5

5. உட்புகுந்து நின்று மெய்மையினை விளைய ஒட்டாது, துள்ளிக் குதித்துச் சூறைகொள்கின்ற இந்திரிய வேடர்களை, முக்கண்ணர் இறைவரது திருவடி நீழலுள் மறைந்துநின்று, அங்கு எழுகின்ற உணர்வாகிய அம்பினல் எய்யலாம்.

தொண்டனேன் பிறந்துவாளாத் தொல்வினைக்
[குழியில்வீழ்ந்து
பிண்டமே சுமந்துநாளும் பெரியதோ ரவாவிற் பட்டேன்
அண்டனே யமரர்கோவே யறிவனே யஞ்சலென்னுய்
தெண்டிரைக் கங்கைசூடுந் திகழ்தரு சடையினுனே. 6

6. கங்கை திகழ்கின்ற சடையுடைப் பெருமானே தொண்டனேன் பிறந்தேன் பிறந்த பயனுருது வினைகளாம்; குழியில்வீழ்ந்து வீணுக உடலைச் சுமந்து திரிவேனுகி, ஆசையாம் கடலிற் பொருந்தினேன். அறிவுருவனே அஞ்சலென்றருள்வாயாக.

பாறினுய் பாவிநெஞ்சே பன்றிபோ லளற்றிற்பட்டுத்
தேறிநீ நினைதியாயிற் சிவகதி திண்ணமாகும்
ஊறலே யுவர்ப்புநாறி யுதிரமே யொழுகும்வாசல்
கூறையான் மூடக்கண்டு கோலமாக் கருதினுயே. 7-9

9. நெஞ்சமே சேற்றிற்பொருந்திய பன்றிபோல அருவருக்கத்தக்க அழகிலாவொன்றை அழகெனக்கருதி, அழிந்தனை, தெளிந்து நீ இறைவனை நினைவு கொள்வையாகில் சிவகதி திண்ணம்.

உய்த்தகா லுதயத்தும்ப ருமையவ ணடுக்கந்தீர
வைத்தகா லரக்கனுேதன் வான்முடி தனக்குநேர்ந்தான்
மொய்த்தகான் முகில்வெண்டிங்கண் மூர்த்தியெ
[னுச்சிதன்மேல்
வைத்தகால் வருந்துமென்று வாடிநா னுெடுங்கினேனே.

10. கயிலையைப் பெயர்த்த இராவணனுே: ஊன்றிய இறைவரது, திருவடி,முடியிற் பொருந்தியபொழுது முடிகள்

வருந்திடத், தான்மெலிந்தான். என் உச்சியில் அவ்விறைவர் திருவடி வைத்தபோது, திருவடி வருந்துமென்று நான் வருந்தி ஒடுங்கினேன். இஃது இறைவன்றன் மலர்போலும் திருவடி வண்ணம், பேராற்றல், தீக்கைப்புரிந்திடும், ஆசாரியன்முன் அதனைப் பெறுகின்ற, அடிமை ஒடுங்கி நிற்கும் பண்பாடு ஆயவற்றை நயம்பெற உணர்த்தி யருள்கின்றது.

திருச்சிற்றம்பலம்.

குறைந்ததிருநேரிசை – பண் கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

வென்றிலேன் புலன்களைந்தும்
வென்றவர் வளாகந்தன்னுள்
சென்றிலே னுதலாலே
செந்நெறி அதற்குஞ்சேயேன்
நின்றுளே துளும்புகின்றேன்
நீசனேன் ஈசனேயோ
இன்றுளேன் நாளை இல்லேன்
என்செய்வான் தோன்றினேனே. 1

1. ஆக்கை நிலையாமையை உணர்த்தி, பெறுதற் குரியது: புலன்களை வென்றிடல், அவ்வகை வென்றவர் குழுவினில், கலந்திடல், செந்நெறியுற்றிடல் என்று உணர்த்தி, அஃது இல்வழி, தோற்றத்தாற் பயனிலது என்று உணர்த்திற்று.

கற்றிலேன் கலைகள்ஞானங்
கற்றவர் தங்களோடும்
உற்றிலே னுதலாலே
உணர்வுக்குஞ் சேயனானேன்
பெற்றிலேன் பெருந்தடங்கண்
பேதைமார் தமக்கும்பொல்லேன்
எற்றுளேன் இறைவனேநான்
என்செய்வான் தோன்றினேனே. 2

2. கற்றல், கலைகளோடு ஞானமுணர்தல், உணர்ந்த பெரியோர்களோடு உறைதல், யாதுமிலதாய வழி, நல்லுணர்வுமிலதாயது. உலகிடை விரும்பப்பெறுகின்ற மாதரார்களுக்கும் பொல்லேன், இப்பிறவியின் பயன்தான் என்னே?

மாட்டினேன் மனத்தைமுன்னே
மறுமையை யுணரமாட்டேன்
மூட்டிநான் முன்னைநாளே
முதல்வனை வணங்கமாட்டேன்
பாட்டினாய் போலநின்று
பற்றதாம் பாவந்தன்னை
ஈட்டினேன் களையமாட்டேன்
என்செய்வான் தோன்றினேனே. 3

3. இவ்வுலகிடை நாய்போல்பாடுற்று பாவங்களையே ஈட்டினேன். முன்னையநாளும் முதல்வனை வணங்கிலேன், ஈட்டிய பாவங்களை நீக்கிடவும் எண்ணிலேன் மறுமையையும், உணரேன் என்செய்வேன்.

கரைக்கடந் தோதம்ஏறுங்
கடல்விட முண்டகண்டன்
உரைக்கடந் தோதுநீர்மை
யுணர்ந்திலே னுதலாலே
அரைக்கிடந் தசையுநாகம்
அசைப்பனே இன்பவாழ்க்கைக்
கிரைக்கடைந் துருகுகின்றேன்
என்செய்வான் தோன்றினேனே. 4

4. நீலகண்டன் எம்பெருமானை, ஓதிடுகின்ற நீர்மை உணர்ந்திலனாகி உலகிடைப் பொருந்துகின்ற வாழ்க்கைக்கும் வயிற்றினுக்கு இரை அடைப்பதற்கும், ஆகி, உள்ளம் உருகுகின்றேன் என்செய்வான் தோன்றினேன்.

செம்மைவெண் ணீறுபூசுஞ்
சிவனவன் தேவதேவன்
வெம்மைநோய் வினைகள்தீர்க்கும்
விகிர்தனுக் கார்வமெய்தி
அம்மைநின் றடிமைசெய்யா
வடிவிலா முடிவில்வாழ்க்கைக்(கு)
இம்மைநின் றுருகுகின்றேன்
என்செய்வான் தோன்றினேனே. 5

5. வாழ்வினை உறுதற்கு, அதனைத் தருவானாய சிவனுக்கு, அம்மைநின்று, அடிமை செய்திடாமைக்கு, இம்மையினின்று உருகுகின்றேன் என்செய்வேன்.

பேச்சொடு பேச்சுக்கெல்லாம்
பிறர்தமைப் புறமேபேசக்
கூச்சிலே னுதலாலே
கொடுமையை விடுமாறேரேன்
நாச்சொலி நாளும்மூர்த்தி
நன்மையை யுணரமாட்டேன்
ஏச்சுளே நின்றுமெய்யே
என்செய்வான் தோன்றினேனே. 6

6. புறம்பேசல் அதனில் நாணிலனுதல், கொடுமையை விடல், நாவினுல் நாமம் நவின்று, நாள்தோறும் மூர்த்தியை நினைந்து, அதனுல் வருகின்ற நன்மையை உணர்தல் ஆய எதுவும் இல்லேன். உலகிடை வருகின்ற ஏச்சுக்களுக்கே, ஆளாவான் தோன்றினேன் என்செய்வேன்.

தேசனைத் தேசமாகுந்
திருமாலோர் பங்கன்தன்னைப்
பூசனைப் புனிதன்தன்னைப்
புணரும் புண்டரிகத்தானை
நேசனை நெருப்பன்தன்னை
நிவஞ்சகத் தகன்றசெம்மை
ஈசனை யறியமாட்டேன்
என்செய்வான் தோன்றினேனே. 7

7. பிறவியின்பயனுக வஞ்சகமில்லாது, தன்னைப் பொருந்திட, பூசித்துணர்கின்ற அகத்தாமரையினில் அகன்றுநின்ற, செம்மை வண்ணத்தீசனை அறியகில்லேன் யாதுசெய்வேன்.

விளைக்கின்ற வினையைநோக்கி
வெண்மயிர் விரவிமேலும்
முளைக்கின்ற வினையைப்போக
முயல்கிலே னியலவெள்ளம்
திளைக்கின்ற முடியினான்றன்
திருவடி பரவமாட்டா(து)
இளைக்கின்றே னிருமியூன்றி
என்செய்வான் தோன்றினேனே. 8

8. கங்கையணி சடையினான்றன், கழலடிபரவுதல் பிறவியின்பயன் அஃதிலாது வினைகளைப் பெருக்கிடல் பெருகிய வினைவழி பல்வேறு பிறவிபெறல், பெற்றபிறவியில் வெண்மயிர் விரவிட முதுமையுற்று, இருமி, கோல் ஊன்றி இளைத்திடல் ஆய இவைகளோ பயன்.

விளைவறி விலாமையாலே
வேதனைக் குழியிலாழ்ந்து
களைகணு மில்லேன்எந்தாய்
காமரங் கற்றுமில்லேன்
தளையவிழ் கோதைநல்லார்
தங்களோ டின்பமெய்த
இளையனு மல்லேன்எந்தாய்
என்செய்வான் தோன்றினேனே. 9

9. இவ்வுலகிடை விளைவறியாது, துன்பமாம்குழியில் அழுந்தினேன் மாதராரோடு இன்பமெய்திட இளையனுமல்லேன் ஆதரவிலேன் என்செய்வேன்.

வெட்டன வுடையனாகி
 வீரத்தால் மலையெடுத்த
துட்டனைத் துட்டுத்தீர்த்துச்
 சுவைபடக் கீதங்கேட்ட
அட்டமா மூர்த்தியாய
 ஆதியை யோதிநாளும்
எட்டனை யெட்டமாட்டேன்
 என்செய்வான் தோன்றினேனே. 10

10. இராவணனது கீதங்கேட்டருளிய, அட்ட மூர்த்தியண்ணலை நாள்தோறும் ஓதி. போற்றிடுவதை, எள்ளளவும் நினையகில்லேன் என்செய்வான் தோன்றினேன்.

திருச்சிற்றம்பலம்.

குறைந்த திருநேரிசை — பண் கொல்லி

இராகம் — நவரோஸ்] [தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

தம்மானங் காப்பதாகித் தையலார் வலையுளாழ்ந்து
அம்மானை யமுதன்றன்னை யாதியை யந்தமாய
செம்மானவொளிகொண்மேனிச் சிந்தையுளொன்றிநின்ற
எம்மானை நினையமாட்டே னென்செய்வான்
 [தோன்றினேனே. 1

1. சிந்தையுள் ஒன்றியிருந்து, அருளிடுவோன், செவ்வானவண்ணர், அவரது அந்நினைவினைப் பெருவழி, பிறவியால் பயனிலை.

மக்களே மணந்ததார மவ்வயிற் றவரையோம்பும்
சிக்குளே யழுந்தியீசன் றிறம்படேன் றவமதோரேன்
கொப்புளே போலத்தோன்றியதனுளே மறையக்கண்டும்
இக்களே பரத்தையோம்ப வென்செய்வான்
[தோன்றினேனே. 2

2. உலகிடை வாழ்வினில் அழுந்தி, அவ்வாழ்வினைப் பாதுகாத்தற்பொருட்டு நீரிற் குமிழியொத்த உடலைப் பாதுகாப்பானாகி ஈசனது திறத்தினிற் பொருந்திடேன், தவம் உணர்கிலேன், என்செயத்தோன்றினேன்.

கூழையே னாகமாட்டேன் கொடுவினைக் குழியில்வீழ்ந்து
ஏழினின் னிசையினாலு மிறைவனை யேத்தமாட்டேன்
மாழையொண் கண்ணினல்ல மடந்தைமார்
[தமக்கும்பொல்லேன்
ஏழையே னாகினாளு மென்செய்வான் தோன்றினேனே. 3

3. பிறவியின்பயன் இன்னிசைகொண்டு இறைவனை ஏத்திடல் என்பதை உணர்த்திற்று.

முன்னையென் வினையினாலே மூர்த்தியைநினையமாட்டேன்
பின்னைநான் பித்தனாகிப் பிதற்றுவன் பேதையேனான்
என்னுளே மன்னிநின்ற சீர்மையதாயினானை
என்னுளே நினையமாட்டே னென்செய்வான்
[தோன்றினேனே. 4

4. உள்ளத்தே மன்னி நின்று, அருள்கின்ற சிறப்பினனை உள்ளத்தே நினைந்து, அவ்வருளைப்பெறுதல் பிறவியின்பயன், அஃதின்றி, முன்னைய வினைகளால் ஆட்டுண்டு பித்தராகிப் பிதற்றிடுதல் பேதமை.

கறையணி கண்டன் றன்னைக் காமரங் கற்றுமில்லேன்
பிறைநுதற் பேதைமாதர் பெய்வளை யார்க்குமல்லேன்
மறைநவில் நாவினானை மன்னிநின் றிறைஞ்சிநாளும்
இறையேயு மேத்தமாட்டே னென்செய்வான்
[தோன்றினேனே. 5

5. சீகாமரப் பண்ணினைக்கற்று, மறைநவில் நாவினானை நாள்தோறும், பொருந்திநின்று ஏத்திடலே பிறவிக்குரிய பயன்.

* * * * 9

வளைத்துநின் றைவர்கள்வர் வந்தெனை நடுக்கஞ்செய்யத்
தளைத்துவைத் துலையையேற்றித் தழலெரி மடுத்தநீரில்
திளைத்துநின் றாடுகின்ற வாமைபோற் றெளிவிலாதேன்
இளைத்துநின் றாடுகின்றே னென்செய்வான்
[தோன்றினேனே. 10

10. சூழ்ந்துநின்ற, இந்திரியர்கள் ஐவர்கள், நடுக்கமுறும்படி வருத்திட, இளைத்தேனாய், அவர்வழி ஆட்டுண்டு மகிழ்கின்றேன், அம்மகிழ்வு: சூடுண்ட உலைநீர்ச்சட்டியில், மகிழ்வுடன் ஆடுகின்ற ஆமையைப்போல அழிந்துபடுவது: என்செய்வான் தோன்றினேன். இஃது, என்றும் நீங்கா மகிழ்வினை உறுதலே, பிறவியின்பயன் என்பதை உணர்த்திற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆருயிர்த்திருவிருத்தம் பண் — கொல்லி

இராகம் — நவரோஸ்] [தாளம் — திரிபுடை

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம், எத்திசைக்கும் இறைவன், புரமூன்றெரித்தோன், பிறப்போடு இறப்பிலான், மண்ணும், விண்ணும், எல்லாம் ஆயவன், தக்கன் வேள்வித் தகர்த்தோன், கொன்றை மாலை திகழ் மார்பினன், நீலகண்டன், கங்கை அணிந்தோன் காலனைக் காய்ந்தோன் மாலின் கண்ணூர் குருதி கொண்டோன் அம்மாலோடு, பிரமன் காணாச் சேவடியான் இராவணனை அடர்த்த அழகன், அந்தி வண்ணத் தொளியான், உள்ளத்தால் உகப்பாரது அகத்தினை இசைந்து இடமாக்கொண்டோன், உமையொரு பாகன் ஆய எம்பெருமானது திருவடி நீழலின் கீழது எனது ஆருயிர் என்று அருளுகின்றது.

குறிப்பு:- இஃது உயிர்கள் பொருந்தி இன்புறும் இடம் திருவடிநீழல் என்பதுணர்த்திற்று.

எட்டாந்திசைக்கு மிருதிசைக் கும்மிறை வாமுறையென்
றிட்டா ரமரர்வெம்பூச லெனக்கேட் டெரிவிழியா
ஒட்டாக்கயவர் திரிபுர மூன்றையு மோரம்பினால்
அட்டானடிநிழற் கீழதன் றேவென்ற னாருயிரே, 1

பேழ்வாயரவி னரைக்கமர்ந் தேறிப் பிறங்கிலங்கு
தேய்வாயிளம்பிறை செஞ்சடை மேல்வைத்த
[தேவர்பிரான்
மூவானிளகான் முழுவுல கோடுமண் விண்ணுமற்றும்
ஆவானடிநிழற் கீழதன் றேவென்ற னாருயிரே. 2

தரியாவெகுளிய ணுய்த்தக்கன் வேள்வி தகர்த்துகந்த
எரியாரிலங்கிய சூலத்தி ளுனிமை யாதமுக்கட்
பெரியான்பெரியார் பிறப்பறுப் பானென்றுந்
[தன்பிறப்பை
அரியானடிநிழற் கீழதன் ரூரேவென்ற ளுருயிரே. 3

வடிவுடைவாணெடுங் கண்ணுமை யாளையொர்
[பான்மகிழ்ந்து
வெடிகொளரவொடு வேங்கை யதள்கொண்டு
[மேன்மருவிப்
பொடிகொளகலத்துப் பொன்பிதிர்ந் தன்னபைங்
[கொன்றையந்தார்
அடிகளடிநிழற் கீழதன் ரூரேவென்ற ளுருயிரே. 4

பொறுத்தானமரர்க் கமுதருளி நஞ்சமுண்டுகண்டம்
கறுத்தான்கறுப்பழகாவுடையான்கங்கைசெஞ்சடைமேல்
செறுத்தான்றனஞ்சயன் சேனைரகலங் கணையொன்றினால்
அறுத்தானடிநிழற் கீழதன் ரூரேவென்ற ளுருயிரே. 5

காய்ந்தான்செறற்கரி யானென்று காலனைக்
[காலொன்றினால்
பாய்ந்தான்பணைமதில் மூன்றுங் கணையென்னு
[மொள்ளழலால்
மேய்ந்தான்வியனுல கேழும் விளங்க விழுமியநூல்
ஆய்ந்தானடிநிழற் கீழதன் ரூரேவென்ற ளுருயிரே. 6

உளைந்தான்செறுதற் கரியான் றலையை யுகிரொன்றினால்
களைந்தானதனை நிறைய நெடுமால் கணுர்குருதி
வளைந்தானொருவிர லின்னொடு வீழ்வித்துச்
[சாம்பர்வெண்ணீ
றளைந்தானடிநிழற் கீழதன் ரூரேவென்ற ளுருயிரே. 7

முந்திவட்டத்திடைப் பட்டதெல் லாமுடி வேந்தர்தங்கள்
பந்திவட்டத்திடைப் பட்டலைப் புண்பதற்
[கஞ்சிக்கொல்லோ
நந்திவட்டந்நறு மாமலர்க் கொன்றையு நக்கசென்னி
அந்திவட்டத்தொளி யானடிச் சேர்ந்ததென் னுருயிரே. 8

மிகத்தான்பெரியதோர் வேங்கை யதள்கொண்டு
[மெய்ம்மருவி
அகத்தான்வெருவநல்லாளை நடுக்குறுப்பான்வரும்பொன்
முகத்தாற்குளிர்ந்திருந் துள்ளத்தி னுலுகப் பானிசைந்த
அகத்தானடிநிழற் கீழதன் றேவென்ற னுருயிரே. 9

பைம்மாணரவல்குற் பங்கயச் சீரடி யாள்வெருவக்
கைம்மாவரிசிலைக் காமனை யட்ட கடவுண்முக்கண்
எம்மானிவனென் றிருவரு மேத்த வெரிநிமிர்ந்த
அம்மானடிநிழற் கீழதன் றேவென்ற னுருயிரே. 10

பழகவொரூர்தியான் பைங்கட் பாரிடம் பாணிசெய்யக்
குழலுமுழவொடு மாநடமாடி யுயரிலங்கைக்
கிழவனிருபது தோளு மொருவிர லாலிறுத்த
அழகனடிநிழற் கீழதன் றேவென்ற னுருயிரே. 11

திருச்சிற்றம்பலம்.

## பாவநாசத் திருக்குறுந்தொகை

இராகம் – நாதநாமகிரியா] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

உயிர்கள் பழி பாவங்களைத் தீய, வினைகளின் பயனாக உறுகின்றன. பின்னும் பின்னும் பிறவியுற்று மெலிகின்றன. அம்மெலிவு நீங்கிட மூலமாய தீவினையும் பழியும் நீங்கவேண்டும். அங்ஙனம்பற்றி வருத்துகின்ற பாவங்களும் பழிகளும் நீங்கிடுதற்கு நீக்கியருள்கின்ற திருவடிச்சிந்தனை இன்றியமையாதது. அச்சிந்தனையினை உறுதற்கு நீராடித் தூய்மைபெறல், சாத்திரமொடு வேதமாதி கலைகளுணர்ந்து திறம் உணரல், தவத்தோடு விரதங்கள்பூண்டு, ஊனைவருத்தி நிலையிலா நெஞ்சினை நிலை பெறுத்திடல், பட்டராகிப் பூசித்திடல் ஆய இவைகள் சாதனங்கள். இச்சாதனங்களைக்கொண்ட சிந்தை உறுவது திருவடி. அத்திருவடிச் சிந்தனை இல்வழி சாதனங்களால் மட்டும் பயனில்லை. இச்சாதனங்களோடு அன்புநிறை சிந்தையையும் சிந்தையில் இருந்து அருள்புரிகின்ற திருவடிகளையும் பெற்று உள்கிடின் பாவங்கள் நாசமாம் என்பதை உணர்த்தி அருள்கின்றது இத்திருப்பதிகம்.

பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவி லஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. 1

1. பாவங்களோடு பழிகள்நீங்கிட விரும்புவீராகி ஆனைந்துமாடுவோன் கழலிணை உள்குமின். அங்ஙனம் உள்குகின்றஉயிர்களோடு கலந்திருந்தருள்வன் இறைவன்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீசனெ னாதவர்க் கில்லையே. 2

2. கங்கை காவிரி குமரி கடல் ஆய தீர்த்தங்களில் நீராடுவோர் அந்நீராட்டின் பயனுறுவதற்கு அதனை அருளும் இறைவன் உணர்ச்சியில்லாவிடத்துப் பயனிலது.

பட்ட ராகிலென் சாத்திரங் கேட்கிலென்
இட்டு மட்டியு மீதொழில் பூணிலென்
எட்டு மொன்று மிரண்டு மறியிலென்
இட்ட மீசனென் னாதவர்க் கில்லையே. 3

3. பூசனை புரிகின்ற பட்டராகிலும் சாத்திரம் பல கேட்டும், ஈதல் முதலாயதொழில் பல புரிந்திடினும் ஈசனை உணராதார்க்குப் பயனிலை.

வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே. 4

4. வேதம் ஓதல், வேள்விகள் பலபுரிதல், நீதிநூல் களைப் பயிற்றல் அங்கங்களை ஓதியுணர்தல் ஆய எல்லாம் கைவரப்பெறினும் ஈசனை உள்குவார்க்கன்றிப் பயனிலை.

காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்தது வேட்கிலென்
ஏல வீசனென் பார்க்கன்றி யில்லையே. 5

5. காலையில் நீரில்மூழ்கி விதிவழிநின்று வேள்விகள் புரிந்திடினும் ஈசனை எண்ணாதார்க்குப் பயனில்லை.

கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி யிருந்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவா னோக்கிலென்
ஞான னென்பவர்க் நன்றிநன் கில்லையே. 6

6. காடு நாடு எங்கிருந்து தவஞ்செய்திடினும் விரதங்கள்கொண்டொழுகிடினும், ஈசனை எண்ணாதார்க்குப் பயனில்லை.

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே. 7

7. வேடங்கள் பல கொண்டிடினும், ஊனை வருத்தி விரதங்கள்பூண்டு திரிந்திடினும், அம்பலக் கூத்தனைப் பாடுகின்ற தொண்டர்களல்லார்க்குப் பயனில்லை.

நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி யிருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி யில்லையே. 8

8. நோற்றல், பட்டினிகிடத்தல், மலைமேற்றவம் புரிதல், நீரில் மூழ்கித்திரிதல் யாது செய்திடினும் ஈசன் என்பார்க்கன்றி எதுவும் பயனிலை.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலு மரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே. 9

9. பலகோடி தீர்த்தங்களில் மூழ்கிடினும் அரனிடத்து அன்பில்லாத செயல்வழி மேற்குறித்த எல்லாச் செயல்களும் ஓடுகின்ற நீரினை ஓட்டைக்குடத்திலே பொருந்திட மூடிவைத்திட்ட மூர்க்கனது செயல்போல் பயனிலதாகும்.

மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே. 10

10. தவங்கள் பலசெய்து வருந்திடினும் இறைவனது சேவடிப் பற்றில்லாதார்க்கு யாதும் பயனில்லை.

திருச்சிற்றம்பலம்.

## க்ஷேத்திரக்கோவை, பண் – திருத்தாண்டகம்

### இராகம் – அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

இப்பதிகப்பாடல் ஒவ்வொன்றும் இதிற்குறித்த தலங்களில் எல்லாம் இருந்தருளுகின்ற பரமன் திருக்கயிலாயத் திருமலையில் இருக்கின்ற சிவபெருமானேஎனத் தொண்டர்களைநோக்கி அருளுகின்றது.

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முளையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்சிரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காண லாமே. 1

ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கைவீ ரட்டா னமுங்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார் கழுக்குன்றுங் கானப்பேருங்
கயிலாய நாதனையே காண லாமே. 2

இடைமரு தீங்கோ யிராமேச் சுரம
இன்னம்பர் ஏரிடவை ஏமப்பேரூர்
சடைமுடி சாலைக் குடி தக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே 3

எச்சி லிளம ரேம நல்லூ
ரிலம்பையங் கோட்டு ரிறையான் சேரி
அச்சிறு பாக்க மளப்பூ ரம்ப
ராவடு தண்டுறை யழுந்தூ ராறை
கச்சினங் கற்குடி கச்சூ ராலக்
கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியு மேகம் பத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. 4

கொடுங்கோளூ ரஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்கள நன்னில நெல்லிக் காவு
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூ ரேழூர் தோழூ
ரெறும்பியூ ரேராரு மேம கூடம்
கடம்பையிளங் கோயி றன்னி னுள்ளுங்
கயிலாய நாதனையே காண லாமே.

மண்ணிப் படிக்கரை வாள்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணசி
வெண்ணி விள த்தொட்டி வேள்விக் குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணா கடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூரும்
கண்ணை களர்க்காறை கழிப்பா லையுங்
கயிலாய நாதனையே காண லாமே. 6

வீழி மிழலை வெண்காடு வேங்கூர்
வேதி குடி விசயமங்கை வியலூர்
ஆழி யகத்தியான் பள்ளி யண்ணா
மலையாலங் காடு மரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடனாகைக் காரோணத் துங்
கயிலாய நாதனையே காண லாமே. 7

உஞ்சேனை மாகாள மூற லோத்தூ
ருருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்ட மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடன் மீயச்சூர் வைகா
வேதீச்சுரம் விவீசுரம் வெற்றி யூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையுங்
கயிலாய நாதனையே காணலாமே. 8

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ் சிற்றேமஞ் சேறை
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழுமதிகை வீரட் டான
மையா றசோகந்தி யாமாத் தூரும்
கண்டியூர் வீரட்டங் கருகா வூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 9

நறையூரிற் சித்தீச் சரநள் ளாறு
நாரையூர் நாகேச்சர நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமீச் சரம்
உறையூர் கடலொற்றி யூரூற் றத்தூ
ரோமாம் புலியூரோ ரேட கத்தும்
கறையூர் கருப்பறியல் கன்றாப் பூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 10

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவல மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சிய மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தா னத்து
நிலவுபெருங் கோயில்பல கண்டாற் றொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## நின்றதிருத்தாண்டகம்

இத்திருப்பதிகத்தின் திருப்பாடல்கள் உலகில் காணப் படுகின்ற பஞ்சபூதங்கள், மலை, கடல், ஆறுகள் காவிரி முதலாய தீர்த்தங்கள் மாதா பிதா மக்கள் சித்து அசித்து யாவும் தாமாகி எல்லாவற்றையும் இயக்குவானும் ஆகி அடைந்தாரை ஆட்கொள்வோனாய் நின்றருள்வோன், எழுஞ்சுடர்வண்ணன் எம்அடிகள் சிவனே என்றருள் கின்றது.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகிக்
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே. 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 2

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் காலாறாய்க் கழியு மாகிக்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே. 3

காற்றாகிக் கார்முகிலாய்க் கால மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமா னுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றானா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி யத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையு ஞாயிறுந் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தி னின்ற
இரதங்க ணுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே. 5

அங்கமா யாதியாய் வேத மாகி
யருமறையோ டைம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பான்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 6

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலு மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதே யாகி
யழல்வண்ண வண்ணர்தா நின்ற வாறே. 7

ஆவாகி யாவினி லைந்து மாகி
யறிவாகி யழலாகி யவியு மாகி
நாவாகி நாவுக்கோ ருரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிக ணின்ற வாறே. 8

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கண் மூன்றினையு மெய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிக ணின்ற வாறே. 9

மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமா யருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கு மெல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் றானே யாகி
ஏலா தனவெல்லா மேல்விப் பானாய்
எழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்.

தனித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

அப்பனீ யம்மைநீ யைய னாநீ
யன்புடைய மாமனு மாமி யுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூ ருநீ

துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத் துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே. 1

1. தந்தையொடுதாய் துய்ப்பன உய்ப்பன எல்லாம் ஏறூர்ந்த செல்வன்நீயே.

வெம்பவரு கிற்பதன்று கூற்ற நம்மேல்
வெய்யவினைப் பகையும் பைய நையும்
எம்பரிவு தீர்ந்தோ மிடுக்க ணில்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமே லாறு சூடி
யனலாடி யானஞ்சு மாட்டுகந்த
செம்பவள வண்ணர் செங்குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே. 2

2. செவ்வானம் ஒத்த சிவனர் என் சிந்தையர்: ஆதலின் இயமனது கோபம் அச்சம் துன்பம் வினைப்பகை யாதும் இல்லோம்.

ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
யடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே. 3

3. கண்ணுதலான் அருளிலையேல், ஆடல் அடங்கல் ஓடல் உருகல் பாடல் பணிதல் ஆய யாவும் செயல் இலதாம்.

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. 4

4. கனகமாமணி நிறத்தெம் கடவுளானே வேத உபநிடதங்கட்கும் அப்பாற்பட்டு சொல்லுதற்கரியது நின் தன்மை. கருணையால் நிலையிலாத நெஞ்சினுள் புகுந்து நின்றனை; கற்பகமே யான் உன்னைவிடேன்.

திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல வடவி காடே. 5

5. திருக்கோயில், திருவெண்ணீறணிதல், அன்போடு பாடுதல், சங்கம் ஊதல், அரும்போடு மலர்கொண்டு பூசித்துஉண்ணல், ஆய இவைகள் இல்லாத ஊர் சுடுகாடே.

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்
　　றீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகா லுந் திருக்கோயில் சூழா ராகில்
　　உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
　　அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
　　பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே. 6

6. அஞ்செழுத்தோதல், இறைதிறம்பேசல், திருக்கோயில் வலம்வரல், பூசித்து உண்ணல், வெண்ணீறு அணிதல் ஆய இவைகளைப்பெறாத அன்பிலார், நோய்களால் நலிவுண்டு பின்னும் பின்னும் செத்துச் செத்துப் பிறக்கின்ற தொழிலுக்கே ஆளாகின்றனர்.

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
　　நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
　　மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
　　பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானா யென்னானா யென்னி னல்லால்
　　ஏழையே னென்சொல்லி யேத்து கேனே. 7

7. ஒப்புவமை இல்லா ஒருவன் நீ: இப்புவியில்புகழத் தக்க பொருளும்நீயே. அத்தகையநீ ஏழையேனையும் உடையனானாய் என்பதல்லாது என்சொல்லி யேத்துவது.?

அத்தாவுன் னடியேனை யன்பா லார்த்தாய்
அருணோக்கிற் றீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையு மரியைநீ யெளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயே னாயேன்
பிழைத்தனக ளெத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையு மெம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே. 8

அத்தா அன்பினால் அடியேற்கு, அருள்நோக்கு ஈந்து எளியையாய் இரங்கி ஆண்டுகொண்டனை, பிழையெலாம் பொறுத்தாய், இத்தனையும் யெம்தரத்ததோ? கருணைதான் இருந்தவாறு என்னே.

குலம்பொல்லேன்குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லே னான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலே னடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவு மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லே னிரப்பதே யீய மாட்டேன்
என்செய்வான் றோன்றினே னேழை யேனே. 9

9. நற்குலத்திற் றோன்றிலேன் அதன்வழி குணம் குறி நலம் நல்லாரிசைவு ஈதல் யாவும் இலதானேன், ஏழையேன் என்செய்வான் தோன்றினேன்?

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே. 10

10. யாம் சங்கநிதி, பத்மநிதி எதுவாயினும் மங்குவார் செல்வங்களை மதியோம். அங்கங் குறைந்தழுகு தொழுநோயர் பசுவுரித்துத் தின்று திரிந்திடும் புலையரே ஆயினும், கங்கையைச் சடைக்கரந்த எம்பெருமாற்கு அன்பராகில் அவரே யாம் வணங்குங் கடவுள்.

திருச்சிற்றம்பலம்

## தனித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் பசுத்துவம்நீக்கி, ஆளாகக்கொண்டவர் அதிகை வீரட்டானத்தை ஆட்சிகொண்ட சிவனார் என்று தொடங்கி அச்சிவனாரது பரத்துவம் பேராற்றல் அருட்டிறம் அடையாளங்கள் முதலியன உணர்த்தி ஆளாக உடையவர் அவரே என்பதனை உணர்த்தி யருளுகின்றது.

ஆமயந்தீர்த் தடியேனை யாளாக் கொண்டார்
அதிகைவீ ரட்டான மாட்சி கொண்டார்
தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார்
தலையதனிற் பலிகொண்டார் நிறைவாந் தன்மை

வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்
மானிடங்கொண்டார்வலங்கைமழுவாட்கொண்டார்
காமனையு முடல்கொண்டார் கண்ணால் நோக்கிக்
கண்ணப்பர் பணியுங்கொள் கபாலி யாரே. 1

முப்புரிநூல் வரைமார்பின் முயங்கக் கொண்டார்
முதுகேழன் முளைமருப்புங் கொண்டார் பூணாச்
செப்புருவ முலைமலையாள் பாகங் கொண்டார்
செம்மேனி வெண்ணீறு திகழக் கொண்டார்
துப்புரவார் சுரிசங்கின் றோடு கொண்டார்
சுடர்முடி சூழ்ந் தடியமரர் தொழவுங் கொண்டார்
அப்பலிகொண் டாயிழையா ரன்புங் கொண்டார்
அடியேனை யாளுடைய வடிக ளாரே. 2

முடிகொண்டார் முளையிள வெண் டிங்க ளோடு
மூசுமிள நாகமுட னாகக் கொண்டார்
அடிகொண்டார் சிலம்பலம்பு கழலு மார்ப்ப
வடங்காத முயலகனை யடிக்கீழ்க் கொண்டார்
வடிகொண்டார்ந் திலங்குமழு வலங்கைக் கொண்டார்
மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்
துடிகொண்டார் கங்காளந் தோண்மேற் கொண்டார்
சூலைதீர்த் தடியேனை யாட்கொண் டாரே, 3

பொக்கணமும் புலித்தோலும் புயத்திற் கொண்டார்
பூதப் படைகள்புடை சூழக் கொண்டார்
அக்கினொடு படவரவ மரைமேற் கொண்டார்
அனைத்துலகும்படைத்தவையு மடங்கக்கொண்டார்

கொக்கிறகுங் கூவிளமுங் கொண்டை கொண்டார்
கொடியானை யடலாழிக் கிரையாக் கொண்டார்
செக்கர்நிறத் திருமேனி திகழக் கொண்டார்
செடியேனை யாட்கொண்ட சிவனார் தாமே. 4

அந்தகனை யயிற்சூலத் தழுத்திக் கொண்டார்
அருமறையைத் தேர்க்குதிரை யாக்கிக் கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடு மிடமாக் கொண்டார்
மந்தரநற் பொருசிலையா வளைத்துக் கொண்டார்
மாகாளன் வாசல்காப் பாகக் கொண்டார்
தந்திரமந் திரத்தரா யருளிக் கொண்டார்
சமண்டீர்த்தென் றன்னையாட் கொண்டார் தாமே.

பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்
பவளநிறங் கொண்டார் பளிங்குங் கொண்டார்
நீரடங்கு சடைமுடிமே னிலாவுங் கொண்டார்
நீலநிறங் கோலநிறை மிடற்றிற் கொண்டார்
வாரடங்கு வனமுலையா ளையை லாகி
வந்திட்ட பலிகொண்டார் வளையுங் கொண்டார்
ஊரடங்க வொற்றிநகர் பற்றிக் கொண்டார்
உடலுறுநோய் தீர்த்தென்னை யாட்கொண்டாரே. 6

அணிதில்லை யம்பலமா டரங்காக் கொண்டார்
ஆலால வருநஞ்ச மமுதாக் கொண்டார்
கணிவளர்தார்ப் பொன்னிதழிக் கமழ்தார் கொண்டார்
காதலார் கோடிகலந் திருக்கை கொண்டார்

மணிபணத்த வரவங்தோள் வளையாக் கொண்டார்
மால்விடைமே னெடுவீதி போதக் கொண்டார்
துணிபுலித்தோ லினையாடை யுடையாக் கொண்டார்
சூலங்கைக்கொண்டார்தொண் டெனைக்கொண்டாரே.

படமூக்கப் பாம்பணையா னோடு வானோன்
பங்கயனென் றங்கவரைப் படைத்துக் கொண்டார்
குடமூக்கிற் கீழ்கோட்டங் கோயில் கொண்டார்
கூற்றுதைத்தோர் வேதியனை யுய்யக் கொண்டார்
நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்
நினையாத பாவிகளை நீங்கக் கொண்டார்
இடமாக்கி யிடைமருதுங் கொண்டார் பண்டே
யென்னையிங்கா ளாட்கொண்ட விறைவர் தாமே. 8

எச்சனிணத் தலைகொண்டார் பகன்கண் கொண்டார்
இரவிகளி லொருவன்பல் லிறுத்துக் கொண்டார்
மெச்சன்வியாத் திரன்றலையும் வேறாக் கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார் வேள்வி காத்து
உச்சநமன் றாளறுத்தார் சந்திரனை யுதைத்தார்
உணர்விலாத் தக்கன்றன் வேள்வி யெல்லாம்
அச்சமெழ வழித்துக்கொண் டருளுஞ் செய்தார்
அடியேனை ஆட்கொண்ட அமலர் தாமே. 9

சடையொன்றிற் கங்கையையுந் தரித்துக் கொண்டார்
சாமத்தி லிசைவீணை தடவிக் கொண்டார்
உடையொன்றிற் புள்ளியுழைத் தோலுங் கொண்டார்
உள்குவா ருள்ளத்தை யொருக்கிக் கொண்டார்

கடைமூன்றிற் பலிகொண்டார் கனலுங் கொண்டார்
காபால வேடங் கருதிக் கொண்டார்
விடைவென்றிக் கொடியதனின் மேவக் கொண்டார்
வெந்துயரந் தீர்த்தென்னை ஆட்கொண் டாரே. 10

சூராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
சுடமுழநந் தீசனைவா சகனுக் கொண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றனெடுந் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங்கைக் கொண்டார் பயங்கள் பண்ணி
இராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டார்
இடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்

திருச்சிற்றம்பலம்.

உடையாளுன்றன் நடுவிருக்கும்
உடையாள்நடுவுள் நீயிருத்தி
அடியேன்நடுவு ளிருவீரும்
இருப்பதானல் அடியேனுன்
அடியார்நடுவுள் இருக்கும்அருளைப்
புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியாமுதலே யென்கருத்து
முடியும்வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

திருவருள் புரிந்தாளாண்டு கொண்டிங்ஙன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தானந்தமே தருநின்
பெருமையிற் பெரிய தொன்றுளதே
மருதர சிருங் கோங்ககின் மரஞ்சாடி
வரைவளங் கவர்ந்திழி வையைப்
பொருதிரை மருங்கோங் காவணவீதிப்
பூவணங் கோயில் கொண்டாயே

## திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங் குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு
மென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலுமயனு மறியாநெறி தந்து
வந்தென் மனத் தகத்தே
பாலும் அமுதமும்ஒத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுது மே.

## பெரியபுராணம்

நாமமூதூர் மற்றதனுள் நல்லோர்
மனம் போலவரணிந்த
சேமம் நிலவு திருநீற்றின் சிறந்த
வெண்மைத்திருந் தொளியால்

யாம இருளும் வெளியாக்கு
மிரவேயல்ல விரைமலர் மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும்
களங்க மின்றி விளங்குமால்.

அன்ன வடிவும் ஏனமுமாம்
அறிவாரிரு வரறியாமல்
மன்னும் புகலூர் உறைவாரை
வர்த்தமான வீச்சரத்து
நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள
நாளும் பூசைவழு வாமே
பன்னும் பெருமை அஞ்செழுத்தும்
பயின்றே பணிந்து பரவினர்.

திருச்சிற்றம்பலம்

83
4-74
1.90



உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0

இவ்விதழ் ஒவ்வொரு ஆங்கில மீ 10உ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டினிடையிலே சேருவோருக்குச் சேர்ந்த மாதத்திலிருந்து ஓராண்டுக்கு அவர்களின் கையொப்பத்தொகை கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.